Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk


MONDAY, FEBRUARY 21, 2022

திங்கட்கிழமை பெப்ரவரி 21, 2022 | ஒளி: 07 கதிர்: 237 | பக்கம்:09 | நகரப்பதிப்பு Free

மே 18 நினைவேந்தல்

# முன்னாள் அரசியல் கைதிக்கு ரீ.ஐ.டி கடிதம்

■ க. அகரன்



2021 மே மாதம் 18 ஆம் திகதியன்று உங்களுடைய வீட்டில் யாரை நினைவேந்தல் செய்தீர்கள் என்பது தொடர்பிலான பெயர் விவரங்களை வழங்குமாறு, வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரிடம் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் (ரீ.ஐ.டி) கோரியுள்ளனர்.

தொடர்ச்சி P2



# புத்தாண்டில் தட்டுப்பாடின்றி பொருட்கள் கிடைக்கும்

**நியாயமான விலையில் வாங்கலாம் என்கிறார் லசந்த**

■ எஸ்.கணேசன்

அரிசி, சீனி உட்பட நுகர்வுப் பொருட்களுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு மற்றும் பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டுள்ளன எனவும் ஏனைய பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்படும் எனவும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன,

தொடர்ச்சி P2

எங்காவது நடக்கும் ஒரு கொலையால்

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

**பாதாள குழுக்களை கட்டுப்படுத்தி உள்ளதாகவும் பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு**

**பாதுகாப்பு குறித்து வாராந்தம் அரை நாள்களுக்கு ஆழ்ந்த கலந்துரையாடல்**

எங்காவது ஒரு கொலை நடந்துள்ளது என்பதை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அறிவிக்க முடியாது என்று தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, கொலைகள் போன்ற சம்பவங்கள் பொதுவாக எந்த நாட்டிலும் நடக்கும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# தமிழ்த் தேசியத்தின் பெயரால் பல கட்சிகள் முளைக்கின்றன

■ செ. கீதாஞ்சன்



“சிதறிப்போய் இருக்கின்ற எதுவும் செய்யமுடியாமல் வீழ்ந்து போய் இருக்கின்ற இந்தத் தமிழ்ச் சமூகத்தை எவனும் பயன்படுத்த முடியும். புவிசார் அரசியல் இன்று எங்களை ஆட்டிப் படைக்கின்றது என்று தெரிவித்த வட மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க. சிவனேசன் தமிழ்த் தேசியத்தின் பெயரால் பல கட்சிகள் முளைக்கின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

“சீனா வருகின்றது. இந்தியா, சீனாவுக்கு எதிராக வருகின்றது அல்லது அமெரிக்கா அக்கறையாக இருக்கின்றது. நோர்வே வந்து பேச்சுவார்த்தை நடத்துகின்றது அல்லது பிரித்தானியாவில் இருக்கின்றவர்கள் எங்கள் மீது அன்பு கொண்டுள்ளார்கள் என்பது எல்லாம் புவிசார் அரசியலாகும்” என்றார்.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் ஸ்தாபகரும் செயலதிபருமான கதிர்காமர் உமாமகேஸ்வரனின் 77 ஆவது ஜனன தின நிகழ்வு முள்ளியவளையில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு சிறப்புரைஆற்றும் போது சிவனேசன் இதைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# நம்பிக்கை சிதைகிறது

**இருவரை விடுவித்தமை தொடர்பில் எதிர்க்கட்சி தெரிவிப்பு**



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை முன்னரே அறிந்திருந்தும் தடுக்கத் தவறியமைக்காக விசேட தீர்ப்பாய மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் முன்னாள் பொலிஸ் மா அதிபரும் விடுவிக்கப்பட்டமை,

தொடர்ச்சி P2

எரிபொருள் பற்றாக்குறையால்

# மின் உற்பத்தி ஸ்தம்பிதம்



எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சபுகஸ்கந்த மற்றும் யுகதனவி மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் நேற்று (20) ஸ்தம்பித்திருந்ததுடன், தேசிய மின்கட்டமைப்புக்கு 370 மெகாவோட் மின்சார இழப்பு ஏற்பட்டது.

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையம், உலை எண்ணெய் மற்றும் டீசலைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையில் எரிபொருள் இன்மையால் நேற்று (20) ஸ்தம்பிதமடைந்திருந்தது. இதன் காரணமாக தேசிய மின் கட்டமைப்பு,

தொடர்ச்சி P2

எரிபொருள் விலை விவகாரம்

# அதிகரிக்கும் கோரிக்கை குறித்து ஜே.வி.பி அதிருப்தி



முன்னெப்போதும் இல்லாத வகையில் எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு எரிசக்தி அமைச்சர் மற்றும் நிதி அமைச்சு விடுத்த கோரிக்கைக்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டினார். இந்தியன் எண்ணெய் நிறுவனத்தை (லங்கா ஐ.ஓ.சி) விட அதிக விலையில் எரிபொருள் விலையை அதிகரிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# மைத்திரியை 4ஆம் மாடிக்கு அழையுங்கள்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவரை தண்டிக்க அரசாங்கம் விரும்பினால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நான்காம் மாடிக்கு அழைத்துச் சென்று விசாரித்து, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக விசாரணை நடத்த மைத்திரிபால சிறிசேனவே ஆணைக்குழுவொன்றை நியமித்தார் என்றும் குறிப்பிட்டார்.

சட்டமா அதிபர் எடுத்த நடவடிக்கையை விமர்சித்த நீதிமன்றம், பிரதிவாதிகளை அழைக்காமல் இருவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்தாகக் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் முக்கிய பொறுப்பாளியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருப்பதாகத் தெரிவித்த அவர், பார்வையற்றவர், காது கேளாதவர், வாய்பேச முடியாதவர் என எந்த ஒருவருக்கும் இது தெரியும் எனவும் அதற்கு நேரில் கண்ட சாட்சியங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.



# முல்லையில் முன்னணியின் தேசிய மாநாடு

■ செ. கீதாஞ்சன்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இவ்வாண்டுக்கான தேசிய மாநாடு, கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றுள்ளது

முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், கட்சியின் முக்கியஸ்தர்களான சட்டவாளர் க. சுகாஸ், காண்டீபன் உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் வடக்கு,

தொடர்ச்சி P2




# விமல் வீட்டுப் பேச்சில் மாயமான ‘கை’

ஆளும் கட்சியின் பங்காளி கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள், இன்றைக்கு சில நாள்களுக்கு முன்னர் அமைச்சர் விமல் வீரவன்சவின் வீட்டில் ஒன்றுகூடினர்.

இந்தச் சந்திப்பின் போது ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதியில் 25 சதவீதம் மேலதிக வரியை அறவிடுவதற்கு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ எடுத்திருக்கும் தீர்மானம் தொடர்பில் விரிவாக கலந்துரையப்பட்டது. அதுமட்டுமன்றி அரசாங்கத்துக்கு எதிரான பங்காளி கட்சிகளால் எதிர்வரும் மார்ச் மாதம்

தொடர்ச்சி P2

அடுத்த வாரத்துக்குள்

# எரிபொருள் கப்பல்கள் நான்கு வருகின்றன

எரிபொருளை ஏற்றிய 04 கப்பல்கள் எதிர்வரும் வாரத்துக்குள் நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

37,500 மெற்றிக் தொன் பெற்றோலை ஏற்றிய கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் (19) வந்தடைந்திருந்தது.

சிங்கப்பூர் விநியோகஸ்தர் ஒருவரால் எரிபொருள் வழங்கப்பட்டதாகவும், கப்பல் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்ததாகவும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.ஆர். ஒல்கா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்றைய தினமும் (20) எரிபொருள் கப்பலொன்று நாட்டை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வரவுள்ள கப்பல்களில் டீசல், பெற்றோல், விமானங்களுக்கான எரிபொருள் என்பன கொண்டுவரப்பட உள்ளதாக தெரிவித்த கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க, அதற்கமைய, நாட்டில் போதுமான எரிபொருள் காணப்படுவதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2




இரு அமைச்சர்கள் இடையே ஏற்பட்டதை

# அரசாங்கத்தின் முரண்பாடாக அர்த்தம் கொள்ள வேண்டாம்

■ சேஹ்ன் செனவிரத்ன

அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு அமைச்சர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை, அரசாங்கத்தின் முரண்பாடாக அர்த்தம் கொண்டு சிலர் நகைப்பதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, மாட்டுப் பண்ணையில் கட்டியிருக்கும் இரண்டு மாடுகள் அங்கிருந்து ஓடிவிட்டதென சகல மாடுகளையும் குற்றஞ்சுமத்த முடியாதென தெரிவித்துள்ளார்.




கண்டியில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு

# 74,000 கோடி ரூபாய் கடன்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, இலங்கையின் இரண்டு அரச வங்கிகளிலும் 37 பில்லியன் டொலர் ( 74, 000 கோடி ரூபாய்) கடனில் உள்ளதால், மேலும் கடன் வழங்க வேண்டாம் என இரண்டு அரச வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நீண்டகாலமாக கடனுக்கு எரிபொருள் விற்பனை செய்வதே இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை 8,000 கோடி ரூபாயையும், ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் 6,300 கோடி ரூபாவையும் கடனாகப் பெற்றுள்ளதாகவும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பணத்தை செலுத்தாத காரணத்தால் கூட்டுத்தாபனம் கடனாளியாகி உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் காரணமாக அந்த நிறுவனங்களுக்கு கடனுக்கு எரிபொருள் விநியோகிக்கின்றமை நிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அரச வாகனங்களில்

# அத்தியாவசியமின்றி பயணிக்க வேண்டாம்

**அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு சுற்றறிக்கை**

அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு விசேட சுற்றறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ள அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி, அரச வாகனங்களை அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு பயன்படுத்த வேண்டாம் என ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்தியாவசியமற்ற பயணத்தை தவிர்த்துக் கொள்ளுமாறும், மின்சாரத்துக்காக எரிபொருளைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# புத்தாண்டில் தட்டுப்பாடின்றி பொருட்கள் கிடைக்கும்

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டத்தை நேற்று (20) ஆரம்பித்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப்பகுதியில் தட்டுப்பாடின்றி மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான சூழலை உருவாக்குவதற்காக நிதி அமைச்சர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த குழு வாராந்தம்கூடி நிலைமைகளை சீர்செய்துவருகின்றது என்றும் தெரிவித்தார்.

பெருந்தோட்ட மக்களுக்கு தற்போது மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது சம்பந்தமாகவும் ஆராயப்படும் என்றார்.

தேயிலை ஏற்றுமதிமூலம் எமக்கு அந்நிய செலாவணி வருகின்றது. உலக சந்தையில் சிறந்த கேள்வி உள்ளது. இதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களே பங்களிப்பு வழங்கிவருகின்றனர் என்றும் குறிப்பிட்டார். அதேவேளை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சந்திரிக்கா அம்மையார், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன போன்ற ஜனாதிபதிகளின்கீழ் தொண்டமான் குடும்பம் செயற்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் மலையக மக்களுக்கு ஆற்றிய சேவைகளை மறந்துவிடமுடியாது. ரமேஷ் உள்ளிட்டவர்கள் அதற்கு உறுதுணையாக நின்றனர் எனவும் தற்போது சிறந்த படித்த இளம் தலைவராக ஜீவன் தொண்டமான் செயற்பட்டுவருகின்றார் என்றார்.

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

மஹரகம ஜனாதிபதி கல்லூரியில் போர்வீரர் நினைவுச் சின்னத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (20) நடைபெற்றது அதில், கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது வரை தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்று உறுதியளித்த அவர், ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பாதுகாப்பு தொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான தேசிய பாதுகாப்பு சபை கூட்டம் இடம்பெற்றதன் பின்னர், வாரத்துக்கு ஒருமுறை அனைத்து துறை தலைவர்களும் கூடி தேசிய பாதுகாப்பு குறித்து ஆழமான கலந்துரையாடல்களை குறைந்தது அரை நாளுக்கு மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

வெடிகுண்டு மிரட்டல் அல்லது பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படும் என்ற வதந்திகள் வெளியாகும் போதெல்லாம், தாமாக முன்வந்து தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதாகத் தெரிவித்தார்.

எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என்பதை பொதுமக்களுக்கு உறுதியளிக்கும் பணியை தாம் செய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் காலத்திலும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என தெரிவித்த அவர், கடந்த சில நாட்களாக இடம்பெற்ற கொலைகள் மற்றும் ஏனைய சம்பவங்கள் தொடர்பான பல்வேறு செய்திகள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

ஏதோ ஒரிடத்தில் நடக்கும் ஒரு கொலையைக் காட்டிலும் தேசிய பாதுகாப்பு என்பது பரந்த அளவிலான விடயம் என்று தெளிவுபடுத்தினார்.

இலங்கையானது, வேறொரு நாட்டிலிருந்து முன்னெடுக்கப்படும் படையெடுப்பு, பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொண்டால் அல்லது கொவிட் நோயினால் உயிரிழப்பவர்கள் இருந்தால் அல்லது நாட்டில் மக்களை பாதிக்கும் இயற்கை அனர்த்தங்கள் இடம்பெற்றால் அதை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று அறிவிக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எங்காவது ஒரு கொலை நடந்துள்ளது என்பதை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அறிவிக்க முடியாது என்றும் அரசாங்கம் பாதாள உலக செயற்பாடுகளை மிகக்குறைந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

சிறு சிறு சம்பவங்கள் பொலிஸாரால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் கொலைகள் போன்ற நிகழ்வுகள் பொதுவாக எந்த நாட்டிலும் நடக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் அரசியல் கைதியிடம் ரீ.ஐ.டி கடிதம்

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) என்ற முன்னாள் அரசியல் கைதியிடமே பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் விவரம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் அவருக்கு வழங்கப்பட்ட கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை சம்பந்தமாக 2021.05.18 ஆம் திகதி இனப் படுகொலை தினத்தை நினைவூட்டும் முகமாக அத்தினத்தில் விளக்கு வைத்து இறந்தவர்களுக்கு சமர்பணம் செய்த காரணத்துக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு வாக்கு மூலம் வழங்கினீர்கள்.

அதன்போது தனது குடும்ப அங்கத்தவர்களும், நெருங்கிய உறவினர்களும் யுத்தத்தின் மூலம் இறந்து விட்ட காரணத்தினத்துக்காகவே, நான் இந்த தினத்துக்கு விளக்கேற்றி அஞ்சலி அவர்களுக்கு சமர்ப்பணம் செய்தேன் என்று வாக்கு மூலம் கொடுத்து அவ்வாக்கு மூலத்தின் போது யுத்தத்தில் இறந்த குடும்பத்தினரதும், உறவினர்களினதும் விபரங்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கையளிப்பேன் எனவும் கூறியிருந்தீர்கள்.

ஆகையால் அப்பெயர் பட்டியலை 2022.02.22 ஆம் திகதிக்கு முன்பதாக வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு இறந்து போனவர்களின் முழு விவரங்களையும் கையளிக்குமாறு தகவல் தருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மே18 ஆம் திகதி குறித்த முன்னாள் அரசியல் கைதி தனது வீட்டில் இறந்தவர்கள் நினைவாக நீதிமன்ற கட்டளைகளை மீறாத வகையில் அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

> அப்பெயர் பட்டியலை 2022.02.22 ஆம் திகதிக்கு முன்பதாக வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு இறந்து போனவர்களின் முழு விவரங்களையும் கையளிக்குமாறு தகவல் தருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது

# மின் உற்பத்தி ஸ்தம்பிதம்

270 மெகாவோட் மின்சாரம் விநியோகத்தை இழந்தது.

அந்த மின் உற்பத்தி நிலையத்துக்கு எரிபொருள் எண்ணெய் இறக்குமதி செய்யப்படாத நிலையில், இதுவரை டீசலைப் பயன்படுத்தியே மின் உற்பத்தி நிலையம் இயங்கிவந்தது.

நேற்று (20) காலை சபுகஸ்கந்த ஏ மற்றும் பி மின் நிலையங்கள் எரிபொருள் கையிருப்பு முடிவடைந்ததன் காரணமாக மீண்டும் மூடப்பட்டுள்ள அதேவேளை, இதன் காரணமாக தேசிய மின்கட்டமைப்புக்கு 100 மெகாவோட் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆலைகள் மூடப்பட்டதால், மொத்தமாக 370 மெகாவாட் மின்சாரத்தை இலங்கை மின்சார சபை இழந்துள்ளது.

நீர் மின் உற்பத்தியின் மூலம் பகல் வேளையில் இந்த பற்றாக்குறையை ஈடுசெய்ய முடியும் என்றாலும், இந்த நிலைமை இரவு வேளையில் மின்சார விநியோகத்தில் இடையூறு ஏற்படக்கூடும் என அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் (19) சனிக்கிழமை என்ற போதிலும் நாட்டின் மின்சாரத் தேவை அதிகபட்சமாக 2,470 மெகாவோட்டாக அதிகரித்திருந்தது.

நிலக்கரி உள்ளிட்ட அனல் மின் நிலையங்களால் நாட்டின் 76 சதவீத மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், நீர் மின் உற்பத்தி வெறும் 22 சதவீதமாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கும் கோரிக்கை குறித்து ஜே.வி.பி அதிருப்தி



நாட்டுக்குள் இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை அரசாங்கம் மறந்துவிட்டதாக சுட்டிக்காட்டினார்.

மின்சார நெருக்கடியின் பாதிப்பை அனைவரும் எதிர்நோக்கி வருவதாகவும், நிரந்தர தீர்வை வழங்குவதற்கு அமைச்சரவை தவறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொது மக்கள் மீதான பொறுப்பை அரசாங்கம் தவிர்த்து வருவதாக குற்றம் சுமத்திய அவர், அடுத்த தேர்தலில் மக்கள் புதிய கட்சியொன்றை அதிகாரத்திற்கு கொண்டு வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

# நம்பிக்கை சிதைகிறது

நீதித்துறையின் தரம் தொடர்பான பாரிய சிக்கலைக் காட்டுகிறது என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி, இவ்வாறான சம்பவங்கள் காரணமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீதான நம்பிக்கை சிதைந்து வருவதாக தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (20) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே முன்னாள் எம்.பியான அஜித் பீ பெரேரா மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசாங்கம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸாருக்கு கூட்டுப் பொறுப்பு உள்ளது என்றும் இந்த விடயத்தில் நீதித்துறையின் நம்பகத்தன்மை, செயல்திறன் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை குறித்து கேள்வியெழுந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். 800 குற்றச்சாட்டுகளை பதிவு செய்வதால் எந்த பயனும் இல்லை எனவும் யாரும் நீதிமன்றத்தில் நிற்க மாட்டார்கள் என்றும் வலியுறுத்திய அவர், ஊழல் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்படும் அரசியல்வாதிகளின் நற்பெயர், விடுதலையால் மேலும் அழிந்துவிடும் என்றார்.

# அத்தியாவசியமின்றி பயணிக்க வேண்டாம்

இதேவேளை, கொழும்பில் நடைபெறவுள்ள விசேட மாநாடுகள் மற்றும் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ள அரச வாகனங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்துமாறு அமைச்சின் செயலாளர் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எரிபொருள் நுகர்வு மற்றும் எரிபொருள் செலவுகளை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திரு.ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெறும் கூட்டங்களுக்கு அரச நிறுவனங்களிலுள்ள உத்தியோகத்தர்களை அரசாங்க வாகனங்களில் அழைப்பதற்குப் பதிலாக எதிர்காலத்தில் சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் முரண்பாடாக அர்த்தம் கொள்ள வேண்டாம்

தொடர்ந்து தெரிவித்த அவர், ஊடகத்தை எடுத்துக்கொண்டால் ஒரு சில ஊடக நிறுவனங்கள் ஊடக தர்மத்தை மீறி செயற்படலாம். அதற்காக நாம் அனைத்து ஊடக நிறுவனங்கள் மீதும் குற்றஞ்சுமத்த முடியுமா என கேள்வி எழுப்பினார்.

தமக்குள் பொறுப்பு, கடமைகள் மற்றும் நாட்டுக்காக செய்ய வேண்டிய கடமைகளே முக்கியமே தவிர தனிப்பட்ட அபிப்ராயங்களால் எந்த பயனும் இல்லை என்றார்.

எனவே பொதுவான எண்ணப்பாடுகள் ஊடாகவே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என தெரிவித்த அவர், இந்த அரசாங்கம் பலவீனமடைந்துள்ளது என்ற எண்ணத்தை மக்களிடம் தோற்றுவித்து, ஆளும் தரப்பினரால் கிராமங்களுக்கு செல்ல முடியாது.

என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்த எதிர்கட்சி முயற்சிக்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

ஆனால் நாம் இந்த பொய் பிரசாரத்துக்கு அநுராதபுரத்தில் வைத்து பதிலளித்தோம் என்ற அவர், எனவே இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் தொடர்ந்து நம்பிக்கையுடன் இருக்கின்றமை அங்கு தெளிவாக உணர்த்தப்பட்டது என்றார்.

# 'தமிழ்த் தேசியத்தின் பெயரால் பல கட்சிகள் முளைக்கின்றன'

சிவனேசன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "இன்று வரலாற்றை திரிவுபடுத்துபவர்கள் கூறுகின்ற விடயம் உமாமகேஸ்வரனுக்கும் இந்தியாவுக்கும் ஏதோ முரண்பாடு இருந்தது; இந்தியா அவரை கொன்றுவிட்டது என்று கூறுகின்றார்கள். அப்படி நடக்கவில்லை அது தவறான விடயம்.

இந்தியாவில் இருக்கின்ற ஒரு சில அதிகாரிகள் பணத்திற்கு ஆசைப்பட்டு மாலைத்தீவில் இருக்கின்ற பாது அப்துல் சைதிடம் பணத்தைப் பெற்று எங்களிடம் இருந்த தோழர்கள் சிலரை விலைக்கு வாங்கி கொலைசெய்தார்கள் என்பதுதான் உண்மை. அந்த காலகட்டங்கள் ஒவ்வொன்றிலும் நான் அவருடன் இருந்திருக்கின்றேன். அவரை கொலைசெய்தது இந்தியாவோ,புலிகளோ அல்ல அது சதித்திட்டம்" என்று கூறியுள்ளார்.

# முல்லையில் முன்னணியின்...

கிழக்கு மாவட்டங்களின் பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், கட்சியின் தொண்டர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள். நிகழ்வின் முன்னதாக கட்சிக்கொடி கஜேந்திரகுமாரால் ஏற்றிவைக்கப்பட்டு, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கத்தை தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது இவ்வாண்டுக்கான கட்சியின் கொள்கைப் பிரகடனம் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

# எரிபொருள் கப்பல்கள் நான்கு...

இலங்கை மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை வழங்கவுள்ளதாகவும் அதற்கான கட்டணத்தை மின்சார சபை செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் நாளாந்தம் 6,000 மெற்றிக் தொன் எரிபொருள் தேவையே காணப்பட்ட நிலையில், சனிக்கிழமை (19), மெற்றிக் தொன் 9,000 ஆக அதிகரித்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

# விமல் வீட்டுப் பேச்சில் மாயமான "கை"

வெளியிடவிருக்கும் யோசனைகள் தொடர்பிலும் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. அதில், நாட்டின் பொருளாதார பிரச்சினையில் இருந்து நாட்டை கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அந்த யோசனைகளை சமூகமயப்படுத்துதல் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, அத்துரலிய ரத்ன தேரர், ஜயந்த சமரவீர, கெவிந்து குமாரதுங்க, டிரான் அலஸ், வைத்திய ஜி.வீரசிங்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டங்களின் போது, "கையை" சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில், அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர பங்கேற்றிருந்தார். எனினும், இறுதிக் கூட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ரூ. 10 இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியான

# ஹெரோய்னுடன் இருவர் கைது

■ துசித குமார டி சில்வா

அளுத்கம, மிஹிரிபென்ன சந்தி, குருந்துவத்த சமகி மாவத்தை சந்தி ஆகிய இரு இடங்களில் இருந்து போதைப்பொருட்களுடன் 26, 27 வயதுகளையுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விருவரும் தர்கா நகரம், வராபிடிய ஒபஹேன பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடமிருந்து 7 கிராமும் 160 மில்லி கிராம் ஹெரோய்ன், 5 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ள. இவற்றின் உள்ளூர் பெறுமதி ரூ. 10 இலட்சத்துக்கும் அதிகமாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் வைத்திருந்த 38 ஆயிரத்துக்கும் அதிகமான பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு, கைது செய்யப்பட்ட 27 வயதுடைய சந்தேகநபருக்கு நீதிமன்றத்தின் ஊடாக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



பாராளுமன்றில்

# கொரோனா கொத்தணி உருவாகிறது

பாராளுமன்ற பணியாள் தொகுதியில் மேலும் எட்டுப் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது கடந்த வெள்ளிக்கிழமை (18) உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, பாராளுமன்ற பணியாள் தொகுதியில் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் 30 பேருக்கு வெளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே எட்டுப் பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களில் 54 பேருக்கு இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி



கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக தேசிய டெங்குநோய் தடுப்புப் பிரிவின் ஆலோசகரும் வைத்தியருமான சிலாந்தி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 17ஆம் திகதி வரையில் 9 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு டெங்குக் காய்ச்சல் பரவி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 51 சதவீதமானோர் மேல்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றார்.

60 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஆபத்தானவைகள் என அடையாளங்க காணப்பட்டுள்ளன. இதேவேளை இதிலுள்ள ஐந்து பிரிவுகளில் டெங்குக் காய்ச்சல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
.

கடுவலை, நீர்கொழும்பு நகர சபைகளுக்கு உட்பட்டப் பகுதிகள், களுத்துறை, வாதுவ, சாவகச்சேரி, கரவெட்டி, திருகோணமலை, ஆரச்சிக்கட்டு, சிலாபம், பதுளை, எலபத, இரத்தினபுரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அதிக ஆபத்து மிக்க இடங்களாக புதிதாக இனங்காணப்பட்டுள்ளன.

டெங்கு, கொரோனா வைரஸ் என்பன தொற்று நோய்கள். இதற்கான அறிகுறிகள் தென்படுமாக இருந்தால் உடனடியாக பொதுமக்கள் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு நாளுக்கு மேல்,காய்ச்சல் காணப்படுமாக இருந்தால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் என்றார்.

கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு

# ஜூலை பரீட்சை

நாடுமுழுவதிலும் ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான கிராம உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவித்த உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம்.எச். எம். சித்ரானந்த, கிராம உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஜூலையில் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனால், பல கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பணிகளை உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரமே முன்னெடுப்பதாகவும், வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும், எனினும் இதுவரையில் நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் கடந்த சில மாதங்களாக வேலைப்பளுவில் உள்ளதாகவும் இதனாலேயே நேர்முகப் பரீட்சைக்கான திகதியை ஒதுக்க முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஜூலை மாதம் இதற்கான திகதியை ஒதுக்கி நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.




மலே வீதியில் இருந்து கொம்பனித்தெரு ரயில் நிலையம் வரை

# மேம்பாலத்தின் கீழ் இருபுறங்களிலும் நடைபாதைகள்



மலே வீதியில் இருந்து கொம்பனித்தெரு ரயில் நிலையம் வரை நிர்மாணிக்கப்படும் மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில், வாகன தரிப்பிடம் நிர்மாணிக்கவும் வாகன நிறுத்துமிடங்களின் இருபுறமும் கொள்கலன்களுக்கான சேவை பாதைகள், உத்தரானந்த மாவத்தையில் நிர்மாணிக்கப்படும் மேம்பாலத்திற்கு சமாந்தரமாக வீதியின் இருபுறங்களிலும் நடைபாதைகள் அமைக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு புறநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் நீதிபதி அக்பர் மாவத்தை, உத்தரானந்த மாவத்தை வரை நிர்மாணிக்கப்படும் இரட்டை மேம்பால பணிகளை நெடுஞ்சாலைகள் அமைச்சரும் ஆளும் தரப்பு பிரதம கொறடாவுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் பார்வையிட்டார்.

மலே வீதியை அணுகும் நீதிபதி அக்பர் மாவத்தை வரையான மேம்பாலம், கொம்பனித்தெரு ரயில் கடவையை கடக்கும்போது 5.3 மீட்டர் உயரத்திற்கு நிர்மாணிக்கப்படும்.

இந்த விஜயத்தின் போது, மலே வீதியில் இருந்து கொம்பனித்தெரு ரயில் நிலையம் வரையிலான மேம்பாலத்தின் கீழ் வாகன தரிப்பிடத்தை நிர்மாணிப்பது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்தினார். அத்துடன், வாகன தரிப்பிடம் நிர்மாணிக்கப்படும் வீதியின் இருபுறங்களிலும் கொள்கலன் ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கான சேவை பாதைகள் அமைக்கப்படும் என திட்டத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் நலிந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

உத்தரானந்த மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மேம்பாலத்திற்கு சமாந்தரமாக வீதியின் இருபுறங்களிலும் நடைபாதைகள் அமைப்பது தொடர்பிலும் அமைச்சர் இதன்போது கவனம் செலுத்தினார்.

நீதிபதி அக்பர் மாவத்தையில் உள்ள மேம்பாலம் 207 மீட்டர் நீளமும் 8.4 மீட்டர் அகலமும் கொண்டது. உத்தரானந்த மாவத்தையில் அமைக்கப்படும் மேம்பாலம் 396 மீட்டர் நீளம் கொண்டது. இதன் அகலம் 9.4 மீட்டர்களாகும். இரண்டு மேம்பாலங்களையும் இணைக்கும் வகையில் அமைக்கப்படும் மேம்பாலத்தின் நீளம் 310 மீட்டர்களாகும். இதன் அகலம் 6.9 மீட்டர். இதற்கு 5,270 மில்லியன் ரூபாய் செலவிடப்படும்.

அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ. ஆர்.பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அத்தலுவகே, திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர் நலிந்த ரத்நாயக்க, மற்றும் நிர்மாண ஒப்பந்ததாரரின் பிரதிநிதிகள் குழுவும் இதன்போது சமூகமளித்திருந்தனர்.

யாழ் மறை மாவட்ட ஆயரை

# சந்தித்தார் மைத்திரி

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டீன் பெர்னாட் ஞானப்பிரகாஷம் ஆண்டகையை நேற்று (20) சந்தித்து கலந்துரையாடியுள்ளார். பல்வேறு நிகழ்வுகளிலும் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டிருந்தார்.

குறித்த சந்திப்பில் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின் உற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





நோயாளர்களுக்கு ஒமிக்ரோன் தொற்று;

# சிகிச்சைக்கு அழைத்து செல்வதில் அலட்சியம்



நோயாளர்களுக்கு ஒமிக்ரோன் வைரஸ் தொற்று ஏற்பட்டால், அவர்களை உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டுமெனத் தெரிவிக்கும் விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன, அவ்வாறில்லை என்றால் உயிராபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஒமிக்ரோன் வைரஸ் நாட்டில் வேகமாகப் பரவிவரும் அதேவேளை, இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகும் பல்வேறு நோய்களைக் கொண்டவர்களுக்கு, இந்நோய்க்கான அறிகுறிகள் கடுமையாகக் காணப்படுகின்றன.

இதேவேளை இந்த வைரஸால் ஏற்படும் பாதிப்புகள் குறைவு என்பதால், ஏனைய நோய்களைக் கொண்டவர்களுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்படும்போது கூட, அவர்களை வைத்தியசாலைகளுக்கு அழைத்து செல்வதில்லை. மாறாக, அந்த நோயாளர்களை வீட்டிலேயே தொடர்ந்து வைத்திருக்கிறார்கள். இது தொடர்பில் பல்வேறு தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

**“ ஒமிக்ரோன் வைரஸ்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்து செல்வது அவசியம். அவர்களை வீடுகளில் வைத்திருப்பது ஆபத்தானது**

இது உண்மையில் பாரதூரமான விடயம். பல்வேறு நோய்களைக் கொண்டவர்களுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டு, குறைந்தளவிலான நோய் அறிகுறிகள் தென்பட்டாலும் அவர்களை வீடுகளில் வைத்திருப்பது ஆபத்தானது. இதனால் உயிராபத்துகள் கூட ஏற்படலாம்.

மேலும், ஒமிக்ரோன் வைரஸ்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்து செல்வது அவசியம் எனவும் கூறினார்.

# “பொருளாதாரம் தெரியாதவர்களே கேள்விகளைக் கேட்கின்றனர்”



பொருளாதாரம் தொடர்பில் எதையும் தெரியாதவர்களே, கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் அபிவிருத்திப் பணிகள் எதற்கென கேள்வி எழுப்புவதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா, உழைப்பவர்களின் கரங்களுக்கு பணத்தைக் கொண்டு சேர்ப்பதையே அரசாங்கம் செய்வதாகவும் கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியிலும், நாட்டில் தொடர்ந்து அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதைப் பார்க்கும் பலர், நாட்டில் உணவுக்கு வழியில்லாதிருக்கும் நிலையில் அபிவிருத்தித் திட்டங்கள் தேவையா என விமர்சிப்பதாகவும் அவர் இதன்போது கூறினார்.

**“ நாட்டில் உணவுக்கு வழியில்லாதிருக்கும் நிலையில் அபிவிருத்திகள் தேவையா என, பொருளாதாரம் தெரியாதவர்களே விமர்சனங்களை முன்வைக்கிறார்கள்**

பொருளாதாரக் கல்வி தொடர்பில் எந்தவிதமான அறிவும் இல்லாதவர்களே இதுபோன்ற கேள்விகளை கேட்கிறார்கள். அரசாங்கத்திடம் உள்ள பணத்தை, தானம் பண்ணுவதைவிட அந்தப் பணம் உழைப்பவர்களின் கரங்களுக்கு செல்வதையே அரசாங்கம் திட்டமிடுகிறது.

இதுவே, பொருளாதார நியாயம் எனவும், இதைப் புரிந்துகொள்ளாதவர்களே விமர்சனங்களை முன்வைத்து வருவதாகவும் கூறினார்.

# ஜனாதிபதியின் செயலகத்தில் மாற்றங்கள்

ஜனாதிபதியின் செயலாளராக காமினி செனரத் பதவியேற்றதைத் தொடர்ந்து, ஜனாதிபதி செயலகத்தில் பல மாற்றங்கள் கட்டமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் பணிகளை மேலும் வினைத்திறன்மிக்கதாக மாற்றும் நோக்கில், இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் இதன்படி, ஜனாதிபதி நிதியம், மக்கள் தொடர்புப் பிரிவு உள்ளிட்ட மக்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்கும் பிரிவுகளின் பதவிகளுக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



இதேவேளை, ஜனாதிபதிக்கு புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் நிர்வாக ரீதியிலான மாற்றங்களின்போது, பெயர்களைக் குறிப்பிட்டு தவறான அர்த்தப்படுத்தல்களை வெளிப்படுத்த சில சமூக ஊடகங்கள் முயற்சித்து வருவதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அவை உண்மைக்குப் புறம்பானவை எனவும் தெளிவுபடுத்தியுள்ளது.

# தங்கச் சங்கிலிகளை அபகரித்தவர் சிக்கினார்

நுகேகொட குற்றத்தடுப்புப் பிரிவினரால் மிரிஹான, உடஹமுல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, பெண்களிடமிருந்து தங்கச் சங்கிலிகளை அபகரித்துவரும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட 32 வயதுடைய சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து கிரிபத்கொட, ராகம ஆகிய பிரதேசங்களில் பெண்களின் தங்கச் சங்கிலிகளை அபகரித்துள்ளமை தெரியவந்துள்ளது. மேலும் சந்தேகநபரால் கொள்ளையடிக்கப்பட்ட பல பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். முல்லேரியா பகுதியில் இரு பெண்களிடமிருந்து இரு தங்க சங்கிலிகளைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில், சந்தேகநபருக்கு எதிராக அளுத்கடை நீதவான் நீதிமன்றில் இரண்டு வழக்குகள் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டெங்கு பரவலால் மட்டக்களப்பு மாவட்டம்

# சிவப்பு வலயமானது

## உள்ளூராட்சி மன்றங்கள், கிராமிய சங்கங்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என ஜி. சுகுணன் வேண்டுகோள்

■ ஜவ்பர்கான், எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்து உள்ளதன் காரணமாக, மட்டக்களப்பு மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளப்படுத்தபட்டு உள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜி. சுகுணன் தெரிவித்துள்ளார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் 2021ஆம் ஆண்டு, அதிக டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இருந்தது. அதில் 2,800 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். அத்தோடு, அதில் நான்கு போர் மரணத்தைத் தழுவியிருந்தார்கள்.

அதேவேளை, 2022ஆம் ஆண்டில், பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் 75 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு உள்ளார்கள். இந்த டெங்கு நோயின் பரம்பலில் முக்கிய விடயமாக காணப்படுவது, டெங்கு நுளம்பை அழித்தல் ஆகும்.



குறிப்பாக, மட்டக்களப்பு நகரப் பகுதியில் அதிக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு இருப்பதால், நகரப்பகுதிகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் செயற்பாட்டை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

டெங்கு பரவலை மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதாயின் உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள், கிராமிய சங்கங்கள் போன்றவற்றின் ஒத்துழைப்பு, சுகாதார துறைக்கு இக்காலகட்டத்தில் மிகவும் அவசியமாக இருக்கிறது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி போராட்டம்

■ சுப்ரமணியம் பாஸ்கரன்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி வேண்டி ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டமானது நேற்று (20) பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக ஆரம்பமாகி, ஏ-9 வீதி வழியாக டிப்போ சந்தி வரை பேரணியாகச் சென்றடைந்தது. தமக்கான நீதியை சர்வதேசமே பெற்றுத் தர வேண்டும் என வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீப்புப் போராட்டமானது நேற்றுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 1,825 நாள்களைத் தாண்டி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தின்போது, இலங்கை அரசானது தங்களுக்கான நீதியை பெற்றுத்தரும் என்பதில் எந்தவிதமான நம்பிக்கைகளும் இல்லை; சர்வதேச சமூகமே எங்களுக்கான நீதியைப் பெற்று தர வேண்டும் என்றும் குறித்த போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது

போராட்டத்தின் இறுதியில் ஐக்கிய நாடுகளுக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டுள்ளது. குறித்த மகஜர் வேலன் சுவாமிகளிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வல்லப்பட்டையுடன் ஒருவர் கைது

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கண்ணகை அம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள விடுதியில் வல்லப்பட்டையுடன் தங்கியிருந்த அளுத்கமயைச் சேர்ந்த ஒருவரை வெள்ளிக்கிழமை (18) மாலை கைது செய்துள்ளதுடன் 1,700 கிராம் வல்லப்பட்டையை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ். பி. பண்டார தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடையவர் எனவும் மட்டக்களப்பில் வல்லப்பட்டையை விற்பனை செய்வதற்காக அதன் மாதிரியுடன் வந்து விடுதியில் தங்கியிருந்துள்ளார் எனவும் பெரும் தொகையான வல்லப்பட்டை, அளுத்கமவில் பதுக்கி வைத்திருப்பதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார மேலும் தெரிவித்தார்.



இனங்களுக்கிடையில் சமாதானத்தை வலியுறுத்தி

# இரத்ததான முகாம்

■ ஏ.எல்.எம். ஷினாஸ்

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட 'எகெட்' நிறுவனத்தோடு இணைந்து, கல்முனை இருதயநாதர் தேவாலயம் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான முகாம் நேற்று (20) தேவாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இரா. முரளீஸ்வரனின் வழிகாட்டலுக்கு அமைய, இரத்த வங்கி பிரிவின் வைத்திய அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இரத்த மாதிரிகளை சேகரித்துக் கொண்டனர்.

இனங்களுக்கிடையில் சமாதானம், அமைதி, ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆண்கள், பெண்கள் என கல்முனை வாழ் மக்கள், இந்த இரத்ததான முகாமில் கலந்துகொண்டார்கள்.

# இளவாலையில் குழந்தையுடன் தந்தை தலைமறைவு

## தாய் பொலிஸில் முறைப்பாடு

■ எஸ். நிதர்ஷன், எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், இளவாலையில் ஐந்து மாதக் குழந்தையுடன் கணவன் தலைமறைவாகியுள்ளதாக மனைவி இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கணவன், மனைவிக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கணவன் பிள்ளையைத் தூக்கிச் சென்ற சம்பவம் தொடர்பில் ஏற்கெனவே முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனடிப்படையில், பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். இதடையடுத்து கணவனை குழந்தையோடு நீதிமன்றில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டது.

எனினும், பிள்ளையின்றி நீதிமன்றில் முன்னிலையான நிலையில், ஐந்து மாத பாலூட்டும் குழந்தை என்பதற்கிணங்க தாயாரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் பணித்தது.

இந்நிலையில், குழந்தையை தாயாரிடம் ஒப்படைக்காது கணவர் குழந்தையோடு நேற்று முன்தினம் (19) தலைமறைவாகியுள்ளார்.

இதையடுத்து மனைவி இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதோடு தாயார் குழந்தையை பல இடங்களிலும் தேடி அலைகின்றார்.

# தென்னைகளை நாசம் செய்த காட்டு யானைகள்

■ சுப்ரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (19) இரவு புகுந்த காட்டு யானைகள் 20க்கும் மேற்பட்ட தென்னைகளை அழித்து நாசம் செய்து உள்ளன என்றும் இதனால் தங்களது ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் பகுதியில் புகுந்த காட்டு யானைகள் 20க்கும் மேற்பட்ட பயன்தரு தென்னைகளை அழித்து நாசப்படுத்தி உள்ளன.

ஆகவே, குறித்த பிரதேசத்தை பாதுகாக்கும் வகையில் யானை வேலிகளை அமைத்து தங்களுடைய பயிர்களைப் பாதுகாத்துத் தரவேண்டும் என்றும் அதேநேரம் இந்த யானைகளால் ஏற்பட்ட அழிவுகளுக்கு இழப்பீடுகளை பெற்றுத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிறுப்பிட்டியில் பெற்றோல் குண்டு வீசி வீட்டின் மீது தாக்குதல்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், புத்தூர், சிறுப்பிட்டி, - கலையொளி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறை கும்பல், வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதுடன், பெற்றோல் குண்டும் வீசியுள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (19) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வாகனம் ஒன்றில் வந்த ஐந்து பேரைக் கொண்ட வன்முறை கும்பல், தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வீட்டின் மீது பெற்றோல் குண்டையும் வீசிவிட்டு தப்பி ஓடியுள்ளது. குறித்த சம்பவம், தனிப்பட்ட பகை காரணமாக இடம்பெற்று இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அண்மையில், வீதி ஓரத்தில் இருந்து வாள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி அடைவு மட்டம் குறையும்போது பல பிரச்சினைகள் தோன்றும்

## திருமலை மாவட்டச் செயலாளரின் பிரியாவிடையின்போது தெரிவிப்பு

■ ஹஸ்பர்

திருகோணமலை மாவட்டத்தின் கல்விநிலை பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. கல்வியின் மூலம்தான் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். மாவட்டத்தின் கல்வி நிலையை மேம்படுத்த, மாகாண சபையுடன் இணைந்து செயற்பட வேண்டும். மாகாண சபைக்கு அந்த விடயத்தில் கூடிய வகிபாகம் உள்ளது என, திருகோணமலை மாவட்ட செயலாளராகக் கடமையாற்றிய சமன் தர்சன பாண்டிகோராளவுக்கான பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

மாவட்ட செயலாளருக்கான பிரியாவிடை வைபவம், சனிக்கிழமை (19) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி அடைவு மட்டம் குறைவாக அமையும்போது, பல பிரச்சினைகள் தோன்றும். எனவே, இவ்விடயத்தில் உரிய துறைசார் அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்திச் செயற்படுவதன் மூலம், மாவட்டத்தை ஏனைய மாவட்டங்களின் நிலைக்கேற்ப முன்னேற்ற முடியும்.

திருகோணமலை மாவட்டம் பல அரிய வளங்களைக் கொண்டமைந்தது. இதைப் பயன்படுத்தி, மாவட்ட அபிவிருத்தி உட்பட நாட்டின் அபிவிருத்தியைக்கூட ஏற்படுத்த முடியும். அதற்காக, அரச உத்தியோகத்தர்களும் அரசியல் தலைமைகளும் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

குறுகிய காலமே, எனக்கு திருகோணமலை மாவட்ட செயலாளராகக் கடமையாற்ற சந்தர்ப்பம் கிட்டியபோதிலும், மாவட்ட மக்களுக்கு உயர்ந்தபட்ச சேவையை வழங்கியிருந்தேன். குறிப்பாக, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் உட்பட ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் அதற்கு வலுச் சேர்த்தார்கள். அதற்காக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

மாவட்ட செயலகம், பிரதேச செயலக பணிக்குழாத்தினரால் அவர் கௌரவிக்கப்பட்டதுடன் பல நினைவுப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலாளரின் பாரியார், புதல்வன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இவர், கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கருவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு போக பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அதனோடு இணைந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இன்று திங்கட்கிழமை, தமது கடமைகளை இராஜாங்க அமைச்சில் பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





மஜ்மாநகரில் அமைக்கப்பட்ட

# சட்டவிரோத வேலிகள் அகற்றப்பட்டன

■ எம்.எம். அஹமட் அனாம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மட்டக்களப்பு- கொழும்பு பிரதான வீதியில், மஜ்மாநகர் பிரதேசத்தில் ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில், சட்டவிரோதமான முறையில் சிலரால் அமைக்கப்பட்டிருந்த வேலிகளை, ரயில்வே திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து அகற்றியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில்வே பாதுகாப்பு சேவை உதவி அத்தியட்சகர் ஆர்.பி.ஏ. ரத்னமலலவின் பணிப்புரைக்கமைய, மட்டக்களப்பு மாவட்ட ரயில்வே பொறியியலாளர் ஆர்.ஜே. அலெக்சாண்டரின் அனுசரணையோடு, பொலிஸாரும் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இணைந்து, ரயில்வே காணிக்குள் அமைக்கப்பட்ட வேலிகளை அகற்றியுள்ளனர்.

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில், 15 நபர்கள் சட்டவிரோதமான முறையில் வேலி அமைந்த நிலையில், வேலி அக்கற்றப்பட்டு குறித்த நபர்களை காணிக்குள் வரவேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சைவ அடையாளங்கள் வெளிப்பட்ட இடத்தில் புத்த கோபுரம்

■ க. அகரன்



சைவ அடையாளங்கள் வெளிப்பட்ட இடத்தில் இன்று புத்த கோபுரம் காணப்படுகின்றது. புத்த சமயத்தை திணிக்கும் முகமாக 75 சதவீதமான கட்டுமானப் பணியை செய்திருக்கின்றார்கள் என வட மாகாண சபை உறுப்பினர் முன்னாள் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, குமுழமுனை, குருந்தூர்மலை விடயம் தொடர்பில் வினவிய போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"குருந்தூர் மலை சம்பந்தமாக எங்களுடைய சைவ அடையாளங்கள், யாவும் அழிக்கப்பட்டிருப்பதை நானும் பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ், சிறீதரன் ஆகியோர் கொண்ட குழு நேரில் சென்று பார்வையிட்ட போது எங்களால் காணக்கூடியதாக இருந்தது.

உடனடியாக அன்றே, நான் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்து விட்டு, பொலிஸார் கேட்டு கொண்டதற்கிணங்க 29.01.2021 அன்று அந்த இடத்துக்கு பொலிஸாரை அழைத்துச் சென்று, எங்களுடைய சைவ அடையாளங்கள் அழிக்கப்பட்டு இருப்பதைக் காண்பித்திருந்தேன்.

அந்த நேரம் புத்த விகாரை அந்த இடத்துக்கு அருகாமையில் இல்லை. தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வு நடவடிக்கைக்காக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அனுமதி பெற்று ஆய்வு செய்ய போவதாகத்தான் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த தினம் என்று கூறப்படும் நாள் அன்று (04.02.2022 ஆம் ஆண்டு) அங்கே சென்ற போது, கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எட்டுமுக சிவலிங்கம் அங்கே வெளிப்பட்டதாக, ஊடகங்களில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

புத்த சமயத்தை திணிக்கும் நோக்கத்தோடு தொல்லியல் திணைக்களம் ஈடுபடுகின்றதா? தொல்லியல் திணைக்களத்தின் பொறுப்பு என்பது ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிதாகும். அதற்கு நாங்களும் மறுப்பில்லை. ஆனால், ஆய்வு என்ற போர்வையில் தொல்லியல் திணைக்களத்தினர் அங்கே கட்டுமானப் பணி மேற்கொள்வதை நாங்கள் காணக்கூடியதாக இருந்தது.

இருந்தாலும், நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சட்டத்தரணியாக இருப்பதால் அவர் ஊடாக இதற்கான வழக்கு கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம்.

கடந்த எட்டாம் திகதி அந்த வழக்கு நடைபெற்றது. கொவிட்- 19 நடவடிக்கை காரணமாக நாங்கள் செல்லவில்லை. அடுத்த தவணைக்கு நாங்களும் செல்வோம்" என்றார்.

# யாழுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மைத்திரி

■ செந்துரன் பிரதீபன், எம். றொசாந்த், எஸ். நிதர்ஷன்



முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்தின் மதஸ்தலங்களுக்கு நேற்று (20) விஜயம் மேற்கொண்டு விசேட வழிபாடுகளை மேற்கொண்டார். நல்லூர் கொவிலுக்குச் சென்று விசேட வழிபாடுகளை மேற்கொண்ட அவர், பின்னர் ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று வழிபட்டார். அவருடன் நிமல் சிறிபால டி சில்வா, தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் பலரும் பங்கேற்று இருந்தனர்.

பருத்தித்துறையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மாநாடு நேற்று இடம்பெற்ற நிலையிலேயே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் பலரும் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குருட்டு அரசியல்வாதிகளே

# சேவலை சீண்டுகின்றனர்

■ எஸ்.கணேசன்

கண்கள் இருந்தும், பார்வையற்றவர்களாக வலம்வரும் சில அரசியல்வாதிகளே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒன்றும் செய்யவில்லை என்று விமர்சிக்கின்றனர் என தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன், இப்படியானவர்களுக்கு சொல்லில் அல்லாமல், செயல்கள் ஊடாகவே பதிலளித்து வருகின்றோம் என்றார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம், வட்டகொடையில் நேற்று (20) ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், "மலையக பெருந்தோட்ட மக்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்குவதற்கு சுமார் 1,000 தொன் மா தேவை. இவ்வாறு மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படுவதால் அரசாங்கத்துக்கு மாதம் 1,200 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது. வருடம் சுமார் 1,400 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது.

அரசாங்கத்திடம் நிதி பற்றாக்குறை உட்பட பல பிரச்சினைகள் உள்ளன. அப்படி இருந்தும் பெருந்தோட்ட மக்களுக்கு இந்த அரசாங்கம் நேசக்கரம் நீட்டுகின்றது. இதையும்கூட சிலர் இன்று விமர்சிக்கின்றனர். அமைச்சரவைக்கு சென்றது குறித்தும் நகைச்சுவையாக கதைக்கின்றனர். நல்லாட்சியின்போது 50 ரூபாயை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றனர். அது நடந்ததா? இல்லை.

அதேவேளை, ஜீவன் தொண்டமான் ஒன்றுமே செய்யவில்லையென சிலர் விமர்சிக்கின்றனர். அவர்கள் நிச்சயம் குருடர்களாகவே இருக்க வேண்டும். சுயதொழில் ஊக்குவிப்பு உட்பட மலையகத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களை அடிப்படையாகக் கொண்டே நாம் செயற்படுகின்றோம். மாறாக கட்சி பேதம் எம்மிடம் இல்லை" என்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சின்னம், சேவல் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஹட்டன் ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தை

## நவீனமயப்படுத்த நடவடிக்கை

■ சுதத்.எச்.எம்.ஹேவா

"ஹட்டன்- டிக்கோயா நகர சபை ஊடாக நிர்வகிக்கப்படும் ஹட்டன் ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

"இந்த ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைப் பெற்றுக்கொள்வதற்காக, அதிகமானவர்கள் வருகை தரும் நிலையில், அங்கு இடவசதிகள் குறைவாக காணப்படுகின்றன. எனவே, இது தொடர்பில் ஆராய்ந்து, சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்களுக்குத் தேவையான வசதிகளுடன் குறித்த சிகிச்சை நிலையத்தை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு:

## 'நாவல்' நகரில் வேலைத்திட்டம்

■ இரா.யோகேசன்

நாவலப்பிட்டி நகரம், சிறிய மழைக்கும் வெள்ளத்தில் மூழ்குவதால், அதைத் தடுப்பதற்காக நகர மத்தியில் சேரும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கான வேலைத்திட்டம், நாவலப்பிட்டி நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய நகரிலுள்ள வடிகானை அகலப்படுத்தி, கொங்கிரிட் இடும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



எனவே, குறித்த வேலைத்திட்டம் முழுமையாக நிறைவு பெற்றால், அது தமக்கு பலவழிகளிலும் நன்மையை ஏற்படுத்துமென நாவலப்பிட்டி நகர வர்த்தகர்கள் உள்ளிட்ட பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

தேர் பார்க்கச் சென்ற சிறுவன்

## வீடு திரும்பவில்லை; தேடும் பெற்றோர்

■ மஹேஸ் கீர்த்திரத்ன



மாத்தளை, கட்டுதெனிய, வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த 11 வயது சிறுவன் காணாமல் போயுள்ளான்.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேர் திருவிழாவைப் பார்க்கச் சென்ற சிறுவனே, இதுவரை வீடு திரும்பவில்லை என அவனது பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

குறித்த சிறுவன் இறுதியாக சாம்பல் நிற டீசேர்ட்டும் நீல நிற டெனிம் காற்சட்டையும் அணிந்திருந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மாத்தளை பொலிஸாரிடம் முறையிட்டுள்ள சிறுவனின் பெற்றோர், சிறுவன் பற்றிய தகவல்கள் தெரிந்தால் அருகிலிருக்கும் பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 070-7778940 என்ற அலைபேசிக்கோ அழைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





## மானிய கோதுமை மா வழங்கப்பட்டது



இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம், வட்டகொடை, மடக்கும்புர தோட்டத்தில் வைபவ ரீதியாக நேற்று (20) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதி செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஷ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எஸ். கணேசன்)

அனுமதியின்றி மணல் அகழ்ந்த

## ஐவர் சிக்கினர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



கெசல்கமுவ ஆற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் ஐவரும் எல்டொப்ஸ் தோட்டப் பகுதியை ஊடறுத்துச் செல்லும் கெல்கமுவ ஆற்றில் மணல் அகழ்வதாகக் கிடைத்த தகவலுக்கமையவே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐவரும் பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர்களால் அகழப்படும் மணல் அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

மாடியிலிருந்து தவறி விழுந்து

## சுற்றுலாப் பயணி மரணம்

■ எம்.செல்வராஜா, ராமு தனராஜா

பதுளை, எல்ல பிரதேசத்தில் சுற்றுலா விடுதி ஒன்றின் இரண்டாவது மாடியில் இருந்து தவறி விழுந்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செக் குடியரசைச் சேர்ந்த குறித்த நபர், தெமோதரை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

28 வயதான இந்நபர், விடுதியின் இரண்டாம் மாடியில், அவருடன் தங்கியிருந்த இரண்டு நண்பர்களுடன் நேற்றுமுன்தினம் (19) இரவு கதைத்துக் கொண்டிருந்த போதே, அருகிலிருந்த பாதுகாப்பு வேலியையும் உடைத்துக்கொண்டு கீழே விழுந்துள்ளமை தெரியவந்துள்ளது.



சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வழிமாறிய வான் பள்ளத்தில் பாய்ந்தது

### ஐவருக்கு காயம்

■ எஸ்.கணேசன், செதி பெருமாள்

மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதியில் பாக்ரோ பகுதியில் வானொன்று வீதியை விட்டு விலகி, 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுமுன்தினம் (19) இரவு 11.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சாரதி உள்ளிட்ட ஐவர் காயமடைந்து, டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை, கோட்டேகொட பகுதியிலிருந்து சிவனொளிபாதமலை யாத்திரை மேற்கொண்டு விட்டு, திரும்பிச் சென்று கொண்டிருந்த போதே, வான் விபத்துக்குள்ளாகியுள்ளது. வானில் 12 பேர் பயணித்துள்ளனர். அதன் சாரதி உள்ளிட்ட ஐவர் பலத்த காயங்களுக்குள்ளாகி உள்ளனர். ஏனையோர் சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர். யாத்திரையை முடித்துவிட்டு பொகவந்தலாவை-பலாங்கொடை வழியாக, மாத்தறை செல்ல தீர்மானித்த இவர்கள், வழி தவறி சாமிமலை வீதியின் ஊடாக சென்ற வேளையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. வானின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.



## "இறுதி மூச்சு வரை பணி தொடரும்"

### திகா எம்.பி உறுதி

■ எஸ்.கணேசன், மலைவாஞ்சன்

மலையக மக்களுக்கு சேவையாற்றவே நான் அரசியலுக்கு வந்தேன் எனத் தெரிவித்துள்ள தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், இறுதிமூச்சு இருக்கும்வரை மக்களுக்கான தனது பணி தொடரும் என்றார்.

ஹட்டன்- மல்லியப்பு புருட்ஹில் பகுதியில் அமைக்கப்பட்ட புதிய வீடமைப்பு திட்டத்துக்கான மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், "உண்மையைப் பேச வேண்டும்; உண்மையாக இருக்க வேண்டும்; உண்மையாக வாழ வேண்டும் என்பதே எமது பழக்கம். அந்தவகையில் மலையக மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான் அரசியலுக்கு வந்தேன். மாறாக, இருப்பவற்றை சுருட்டிக்கொண்டு செல்வதற்கு அல்ல.

"எமது பெருந்தோட்ட மக்களை, ஒரு சில அரசியல் தலைமைகள் லயத்தில்தான் வாழ வைத்தனர். ஆனால், எனக்கு அமைச்சுப் பதவி கிடைக்கப்பெற்று, குறுகிய காலப்பகுதியிலேயே தனி வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்றளவிலும் அத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அமைச்சுப் பதவியை சரியாகப் பயன்படுத்தி, மக்களுக்கு சேவை செய்தேன். அதனால்தான் புதிய சின்னத்தில் போட்டியிட்டபோதும்கூட, 83 ஆயிரம் மக்கள் எனக்கு வாக்களித்தனர். எனது உயிர் இருக்கும்வரை மக்களுக்கு சேவை செய்வேன்" என்று பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

உடபுஸ்ஸலாவையில்

## சர்ச்சைக்குரிய கடைகள் எரிந்து சாம்பல்

■ ஆ.ரமேஸ்

வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட உடப்புஸ்ஸலாவை நகரில் நேற்று முன்தினம் (19) மாலை ஏழு கடைகள் தீப்பிடித்து முற்றாக எரிந்துள்ளதாக உடபுஸ்ஸலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடைகள் அமைக்கப்பட்டிருந்த இடம் தொடர்பில் ஏற்பட்டிருந்த சர்ச்சை, பல வருடகாலமாக நீடித்திருந்தது. அத்துடன், அவ்விடம் தொடர்பில், வழக்கு விசாரணைகளும் இடம்பெறுகின்றன.

வலப்பனை பிரதேச சபைக்கு சொந்தமான இடத்தில், இக்கடைகள் அமைக்கப்பட்டுள்ளதால், அவ்விடத்தை பிரதேச சபைக்கு வழங்க வேண்டுமென அறிவித்தல் விடுக்கப்பட்டு, கடைகள் அமைக்கப்பட்டிருந்த இடங்களைச் சுற்றி, முட்கம்பி வேலிகளையும் பிரதேச சபை அமைத்திருந்தது.

எனினும் இதையும் மீறி, தற்காலிக கடைகளை அமைத்து, தமது நாளாந்த வர்த்தகத்தை குறித்த கடை உரிமையாளர்கள் முன்னெடுத்து வந்ததுடன், முறையான மின்சார இணைப்பையும் இவர்கள் பெற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் (19) மாலை, கடைகள் திடீரென தீப்பற்றி எரிந்து, முற்றாக நாசமாகியுள்ளதுடன் பாரிய நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.



இது தொடர்பான விசாரணைகளை உடபுஸ்ஸலாவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நினைவுகூரல் பரிந்துரையும் விவரங்கள் கேட்டெழுதிய கடிதமும்

திடீர் மின்வெட்டு அமல்படுத்தப்படும் போதெல்லாம் பிரதான நகரங்களில் வீதி சமிக்ஞைகள் செயலிழந்துவிடுகின்றன. வாகன சாரதிகள் தாம் நினைத்தவாறு, முந்திச் சென்று, இறுகிக்கொள்வர்; இதனால் பெரும் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். அப்போதெல்லாம் அந்தந்த இடங்களில் கடமையில் நிற்கும் போக்குவரத்துப் பொலிஸாரில் பலர், வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பர்.

முன்கூட்டிய அறிவிப்பை விடுத்திருந்தால் பொலிஸ் போக்குவரத்து திணைக்களம் ஆயத்தமாக இருந்திருக்கும். அதனூடாக பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை முன்னெடுத்திருக்கலாம்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், 'ஒருங்கமைத்தல்' இல்லையென்பது எடுக்கப்படும் முடிவுகளில் இருந்து தெட்டத் தெளிவாகின்றது. இதனால், பல நெருக்கடிக்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் அதற்குப் பின்னர், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள் ஆகியவற்றை வாபஸ் பெற்றுக்கொள்ளவோ, அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளவோ வேண்டிய தேவை இருந்திருக்காது. நிறுவனமயப்படுத்தல் வலையமைப்பு இன்மையால், பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமைக்குள் அரசாங்கம் தள்ளப்பட்டுவிடுகின்றது.

மனித உரிமைகள் குழுக்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள், தீர்மானங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிடம், சனிக்கிழமை (19) கையளிக்கப்பட்டது. அதில், 'பயங்கரவாதிகளை நினைவுகூர முடியாது. ஆனால், யுத்தத்தில் உறவினரொருவர் உயிரிழந்திருப்பாராயின் தனிப்பட்ட ரீதியில் அவரை நினைவு கூரலாம்' என்பது முக்கியமான பரிந்துரைகளில் ஒன்றாகும்.

அன்றையதினமே, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் வவுனியா பிரிவு, மே 18 இல், முன்னாள் அரசியல் கைதியொருவர், தனது வீட்டில் நினைவேந்தல் செய்யப்பட்டவர்கள் தொடர்பிலான பெயர் விவரங்களைக் கேட்டுள்ளது. இங்குதான் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கும் விசாரணைப் பிரிவுக்கும் இடையில், 'ஒருங்கமைத்தல்' இன்மையை நன்றாக விளங்கிக்கொள்ள முடிகின்றது.

பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் வவுனியா பிரிவின் ஊடாக தமிழ்மொழியில் கடிதம் எழுதப்பட்டுள்ளது. ஆக, தமிழ்மொழி தெரிந்த அதிகாரிகள் அப்பிரிவில் இருக்கின்றனர். இந்நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை தொடர்பிலான செய்திக்கு, தமிழ் ஊடகங்கள் அதிமுக்கியத்துவம் கொடுத்திருந்தன. அவ்வாறாயின், அக்கடிதத்தை மீளப்பெற்றிருக்க முடியும்.

அரச பொறிமுறையின் கீழ், திணைக்களங்கள், நிறுவனங்கள் உள்ளிட்டவை, ஒன்றோடு ஒன்று தொடர்பில் இருந்திருக்கவேண்டும். அரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானங்கள், ஏககாலத்தில் பகிரப்படவும் நடைமுறைப்படுத்தவும் வேண்டும். ஆணைக்குழுவின் பரிந்துரை என்பதால், அவற்றை நிறைவேற்றுவது தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை அரசாங்கமே எடுக்கவேண்டும். உயிரிழந்த உறவினரை நினைவுகூர்ந்தவர்கள் தொடர்பிலான பட்டியலை அப்பிரிவு கேட்டிருப்பதன் ஊடாக, தனிமனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அவ்வாறு கோருவதில் தவறில்லையெனில், நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் கேட்கவேண்டும் என்பதே எமது அவதானிப்பாகும்.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நாட்டில் பிரச்சினைகள் வரும்போதுதான் மக்கள் சிக்கன வாழ்வு பற்றிச் சிந்திக்கின்றனர். பொருளாதாரப் பிரச்சினைகள் பல்வேறு காரணங்களால் உருவானாலும், தற்போதைய பெருந்தொற்று நோய்களின் பரவுகை, யாவரையும் கிலி கொள்ளவைத்து விட்டது.

இதன் பாதிப்புகளைச் சொல்லத்தேவையில்லை. வளர்முக நாடுகளின் நிலை மிகவும் மோசமானது. பணப் பற்றாக்குறைகளால், உணவுப் பொருட்களை வாங்க முடியாத நிலை.

எனவே, எளியதும் விலை குறைந்ததுமான உணவு வகைகளை உண்ண வேண்டும். உண்மையைச் சொல்லப் போனால், இவைகளே தேகத்துக்கு வலுச்சேர்க்க வல்லவை.

எம்மவர்கள் எதையும் சமாளிக்கும் வல்லமை பெற்றவர்கள். காசு கையில் இருக்கும்போது, கண்டபடி செலவு செய்பவர்கள், இனியாது எமது பாரம்பரிய உணவு வகைகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

வீட்டுத் தோட்டம் உருவாக்குதல் மனதுக்கும் உடலுக்கும் சிறப்பானது. அதுமட்டுமல்ல, நேரம் போவதே தெரியாமல், சுவாரஷ்யமாக இருக்கும்.

நோய்த் தொற்றால் வீடுகளில் சும்மா முடங்குவதைவிட, வீட்டுத் தோட்டச் செய்கை ஆறுதலான வாழ்க்கையை ஏற்படுத்தும். சும்மா இருக்காதீர்கள்! இயங்குக... இயங்குக...!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கல்வித் தகைமையும் அரசியலும்



என்.கே. அஷோக்பரன்

அரசியலில் மாற்றம் வேண்டும் என்போர் பலரினதும் எண்ணப்பகிரல், 'படிச்சவன் அரசியலுக்கு வரவேண்டும்' என்பதாக இருக்கிறது.

'படிச்சவன்' என்ற சொற்பதத்தின் பயன்பாடு, கொஞ்சம் மேலோட்டமானது. ஆனால், பெரும்பாலும் இந்தச் சொல் ஏதோ ஒரு துறையில் கற்று, பட்டம் பெற்று, குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ளமையைச் சுட்டியே, பொதுவில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதி, படித்துப் பட்டம் பெற்ற ஒருவராக இருக்க வேண்டும் என்ற அவா, மக்களிடையே அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கு ஒருவகையில், ஏலவே உள்ள அரசியல்வாதிகளின் நடத்தைகளும் நடவடிக்கைகளும், முக்கிய காரணமாக இருக்கிறது. இத்தகைய மோசமான அரசியல்வாதிகளை வெறுக்கும் மக்களிடையே, அவர்களின் மோசமான நடத்தைகளுக்குக் காரணம், அவர்கள் 'படித்தவர்களாக இல்லை' என்ற பொது மனப்பான்மை, ஏதோவொரு வகையில் உருவாகிவிடுகிறது. ஆகவே படித்தவர்கள், தொழில் நிபுணர்கள் அரசியலுக்கு வந்தால், அவர்கள் திறம்படச் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை, மக்களிடையே ஏற்பட்டுள்ளதையும் காணலாம்.

இந்தப் 'படித்தவர்களின் ஆட்சி' என்பதை முன்னிறுத்தியே, சில கட்சிகள், அரசியல் குழுக்கள் அல்லது அழுத்தக் குழுக்கள், தமது அரசியலை முன்னெடுப்பதையும் நாம் காணலாம்.

இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ கூட, 'வியத்மக' என்ற 'படித்த' நிபுணர்களின் குழுவொன்றின் பலத்த ஆதரவுப் பின்புலத்திலிருந்து வந்தவர். அந்த நிபுணர்களின் ஆட்சியில், இலங்கையை மாற்றுவேன் என்ற சூளுரையோடு தேர்தலில் நின்று வெற்றியும் பெற்றார்.

ஆனால், பாடசாலைக் கல்வியைத் தாண்டிப் படித்திராத, முன்னாள் கிராம சேகவரான மைத்ரிபால சிறிசேனவின் ஆட்சியை விட, மோசமான ஆட்சியாக இந்த 'நிபுணர்'களின் ஆட்சி நடந்துகொண்டிருப்பதை, மக்கள் நித்தம் நித்தம் அனுபவம் மூலம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டின் பெரும் சாபக் கேடான இனவெறித் தீக்கு, எண்ணெய் ஊற்றி, பெரும் தீப்பிளம்பாக மாற்றிய, தனிச்சிங்களச் சட்டத்தை அறிமுகப்படுத்திய எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்தவர்.

20ஆம் நூற்றாண்டில் நடத்தப்பட்ட பெரும் இனரீதியான புத்தக அழிப்பு யாழ்ப்பாண நூலக எரிப்பு ஆகும்.

20ஆம் நூற்றாண்டில் ஆசியாவில் நடத்தப்பட்ட மிகப்பெரிய இன அழிப்பான 1983 கறுப்பு ஜூலை என்பன, சிலோன் பல்கலைக்கழகம், இலங்கை சட்டக் கல்லூரியில் 'படித்த' ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சியில் நடந்தேறியிருந்தன.

"ஒரு மொழி, இருநாடு; இரு மொழி, ஒரு நாடு" என்று 1956இல் பேசிய கலாநிதி கொல்வின் ஆர் டீ சில்வாவும் தனிச்சிங்களச் சட்டத்தை 1956இல் கடுமையாக விமர்சித்த கலாநிதி என்.எம்.பெரேராவும், சிங்கள மொழியை மட்டும் உத்தியோகபூர்வ மொழியாக அறிவித்த, பௌத்த மதத்துக்கு முதலிடம் தந்த 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பை ஆதரித்திருந்தார்கள்.

சிலோன் பல்கலைக்கழகம் மற்றும் இலண்டன் பல்கலைக்கழகத்தல் 'படித்த' கொல்வின் ஆர் டீ சில்வா, கலாநிதி பட்டத்தை இலண்டன் பல்கலைக்கழகத்தின் கிங்ஸ் கல்லூரியில் பெற்றிருந்தார்.

என்.எம். பெரேரா, இலண்டன் பொருளியல் மற்றும் அரசறிவியல் கல்லூரியின் பேராசிரியர் ஹறல்ட் லாஸ்கியின் கீழ் கற்று, தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதுடன், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான முனைவர் பட்டத்தையும் பெற்று, இரட்டைக் கலாநிதிப் பட்டங்களைக் கொண்டிருந்தார்.

இந்த இருவரும் சிறிமாவோவின் அரசாங்கத்தில், அமைச்சர்களாகப் பதவி வகித்தது மட்டுமல்லாது, 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பை ஆதரித்தும் இருந்தார்கள்.

தமிழர்களின் அரசியலைப் பொறுத்தவரையில், 'தனிநாடு' என்ற உணர்ச்சிவயப்பட்ட கோரிக்கையை, அதன் சாத்தியப்பாடுகள், அதன் குறுங்கால மற்றும் நீண்டகால விளைவுகள் என்பவற்றைப் பற்றிய எந்தச் சிந்தனையுமின்றி, எதுவித திட்டங்களுமின்றி அரசியல் பகட்டாரவாரமாக முன்வைத்தவர், ராஜா அப்புக்காத்துவான சா.ஜே.வே.செல்வநாயகம்.

செல்வநாயகத்தின் முன்வைப்பை, தனது அரசியலின் மூலதனமாக மாற்றியவர் 'படித்த' சட்டத்தரணியான அ.அமிர்தலிங்கம். இளைஞர்களைச் சரியான அரசியல் பாதையில் கொண்டு செல்ல வேண்டிய கடமையைக் கொண்டிருந்தவர், இளைஞர்களை உணர்ச்சிவச அரசியலின் பாதையில் இட்டுச்சென்று, தமிழினத்தின் தலையெழுத்தையே தலைகீழாக மாற்றிப்போட்டுவிட்டார். அவர் இட்டதீ, அவரையே சுட்டது.

ஆகவே, 'படித்த' அரசியல்வாதிகளும் கூட, மிக மிக மோசமான முடிவுகளை எடுத்திருக்கிறார்கள்; மிக மோசமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள்; மிக மிக மோசமான காரியங்கள் நிகழ்வதை அனுமதித்திருக்கிறார்கள்; தமது பதவியைக் காத்துக்கொள்ள, பிழையானவற்றை ஆதரித்திருக்கிறார்கள். அதனால், கல்வியறிவு அவசியமில்லை என்று ஆகிவிடாது. ஆனால், கல்வித்தகைமை மட்டும் ஓர் அரசியல்வாதியை சிறந்தவராக்கி விடாது.

முன்னர் குறிப்பிட்டதுபோல, இங்கு பொதுவாகக் கல்வித்தகைமையாக, அல்லது ஒருவரைப் படித்தவராகக் கருதுவதற்கு அடிப்படையாக அமைவது, அவர் முறையான கல்வியைப் பெற்று, பட்டம் பெற்றிருப்பதையே ஆகும். முறையான கல்வி என்பது, ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் முறையான கற்றல் வடிவமாகும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒரு கட்டமைக்கப்பட்ட தரத்தின் அடிப்படையிலான கல்வி இதுவாகும்.

பாலர் பாடசாலைக் கல்வி, பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி என முறையான கல்வி அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. முறையான கல்வி என்பது, ஆரம்பத்தில் வகுப்பறை அடிப்படையிலானது. அதாவது, ஒரு மாணவர் கற்றுக் கொள்ளும் அனைத்தும், மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஒரே நோக்கத்துடன், புத்தகங்கள் மற்றும் பிற கல்விச் சாதனங்களூடு கல்வி புகட்டப்படுகிறது.

இங்கு, எவர் பாடத்திட்டத்தைத் தீர்மானிக்கிறாரோ, அவரே அந்தத் தலைமுறையின் 'முறையான கல்வியறிவின்' அளவையும் பெருமளவுக்குத் தீர்மானிக்கிறார். பல்கலைக்கழகக் கல்வியில்தான் பெருமளவுக்கு ஆய்வு அடிப்படையிலான கல்வியை நோக்கி, முறையான கல்வி திரும்புகிறது. ஆனால், இது குறித்த நபர் தெரிவுசெய்த துறையிலுள்ள ஏதோ ஒரு விடயம் பற்றிய ஆழமான ஆய்வாகவே அமைகிறது.

ஆகவே, முறையான கல்வி என்பது, மனித அறிவை விருத்திசெய்யும் ஒரு வழியே அன்றி, முறையான கல்வி மட்டும்தான் மனித அறிவுக்கான அளவுகோல் என்பது ஏற்புடையதொன்றல்ல.

அரசியல் என்பது, மிகச் சிக்கலானதொரு கலை மட்டுமல்ல, ஆபத்தானதொரு கலையும் கூட. ஏனென்றால், அதிகாரத்தைக் கையாளும் கலை அது! அதற்குப் பரந்த அறிவு அவசியம். அறிவை விடவும் ஆற்றல் அவசியம்.

இவையெல்லாவற்றையும் விட, தரமான குணநலனும் நேர்மையும் நல்லெண்ணமும் அவசியம். அதிகாரம் என்பது, மிகப்பெரும் பலம் மட்டுமல்ல; மிகப்பெரும் பொறுப்பும் கூட!

ஜனநாயக உலகத்தில், அதிகாரம் என்பது மக்களுடையது; மக்களுக்கானது. அப்படியானால், அந்த மக்களின் நல்லெண்ணத்தை முன்னிறுத்துபவர் ஒருவரே, தன்னலமின்றி அதிகாரத்தை மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தும் இயல்பினராவார். ஆனால், நல்லெண்ணம் மட்டும் போதாது.

அதிகாரத்தை எப்படி, மக்களின் நன்மைக்குப் பயன்படுத்துவது என்ற அறிவும் வேண்டும். அது, ஒரு துறைசார்ந்த அறிவாக இருக்க முடியாது. பரந்த அறிவும் அனுபவமும் அதற்குத் தேவை.

நல்லெண்ணமும் பரந்த அறிவும் மட்டும், காரியத்தைச் சாதிக்க உதவாது. அதற்கு எதையும் சாதிக்க வல்ல ஆற்றலும் இயலுமையும் அவசியம். இவையெல்லாம் ஒன்றிணையும்போதுதான் திறமையானதோர் அரசியல்வாதியாக அவர் துலங்குவார்.

ஆகவே, முறையான கல்விறிவு உடையவர்கள் அரசியலுக்கு வந்தால், அது நாட்டிலுள்ள சகல பிரச்சினைகளுக்குமான சர்வரோக நிவாரணியாக அமையும் என்ற நம்பிக்கையில் அர்த்தமுமில்லை; உண்மையுமில்லை.

முறையான கல்விபெறாத காமராஜர், மக்களை நேசிக்கும் நேர்மையான, ஆற்றல் மிகு தலைவனாக இருந்தமையால், முறையான கல்வியைப் பெற்றுக்கொள்ள சாமானியர்களுக்குள்ள சவால்களை, தனது அனுபவத்தின் வாயிலாக உணர்ந்தமையால், மிகப் பரந்த சமூக, பொருளாதார, அரசியல் அறிவைக் கொண்டிருந்தமையால், அனைவரும் கல்வி பெறத்தக்க திட்டங்களை அறிமுகப்படுத்தினார். இப்படிப் பல உதாரணங்கள் உலகெங்கும் இருக்கிறது.

முறையான கல்வி பெற்றவர்களே, சிறந்த அரசியல்வாதிகளாவார்கள் என்று கருதுவதைவிட அபத்தமானது, ஆங்கிலம் நல்லாப் பேசுகிறான்; சிங்களம் நன்றாகப் பேசுகிறான்; தமிழ் நன்றாகப் பேசுகிறான்; இருமொழியாற்றல் உடையவன்; மும்மொழியாற்றல் உடையவன் என்பதால் மட்டும், ஒருவனை மிகச் சிறந்த அரசியல்வாதியாகக் கருதுவதாகும்.

மொழியாற்றலுக்கும் ஒருவனுடைய அறிவுக்கும் நல்லெண்ணத்துக்கும் ஆற்றலுக்கும் எந்தச் சம்பந்தமும்மில்லை. இந்த அபத்தங்களைத் தாண்டி, மக்கள் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

## கடிதங்கள்

### கடல் கொந்தளிப்பால் வாழ்வாதாரத்தை இழந்திருக்கும் மீனவர்கள்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அமைந்துள்ள பெரும்பாலான கடற்பகுதியில் கடல் கொந்தளிப்பு அதிகளவில் காணப்படுவதால், இந்த மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு தொழிலுக்குச் செல்லமுடியாமல், தமது வாழ்வாதாரத்தை இழந்து காணப்படுகின்றார்கள்.

குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில், களுதாவளை, தேத்தாதீவு, மாங்காடு, செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி, ஒத்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள், கடும் கடற்கொந்தளிப்பால், தொழிலுக்குச் செல்லமுடியாமல் இருக்கிறார்கள்.

இவர்கள், தமது வள்ளங்கள், தோணிகள் என்பவற்றை கரையேற்றி வைத்துள்ளதுடன், வாடிகளில் உள்ள மீன்பிடி உபகரணங்களையும் வீடுகளுக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்துள்ளார்கள்.

அன்றாடம் மீன்பிடித் தொழிலுக்கு சென்று, தமது குடும்பத்தைக் காப்பாற்றும் கூலித் தொழிலாளிகள், தமது குடும்பத்துக்கு உணவளிப்பதற்கு மிகுந்த சிரமப்படுகின்றார்கள். இந்தக் கொரோனா காலத்தில், இவர்கள் வேறு தொழிலுக்குச் செல்வதற்கும் வாய்ப்புகள் இன்றி இருக்கின்றார்கள். கடல் கொந்தளிப்பால் வாழ்வாதாரத்தை இழந்திருக்கும் மீனவர்களுக்கு, அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

-வீ. கமலதாசன்

பஞ்சாப்

# உடல் ஒன்று; வாக்குகள் இரண்டு

பஞ்சாப் மாநில சட்டப்பேரவையின் 117 தொகுதிகளுக்கான தேர்தல் தீவிரமாக நடைபெற்றுவரும் நிலையில், அமிர்தசரஸ் மாவட்டத்தில் ஒட்டிப் பிறந்த இரட்டையர், வாக்களிப்பு நிலையத்துக்கு வந்த சம்பவம் அனைவரையும் கவர்ந்துள்ளது.

இதுகுறித்து பஞ்சாப் மாநில அரசு மக்கள் தொடர்பு அதிகாரி கௌரவ்குமார் கூறியதாவது: “பஞ்சாப் அமிர்தரஸ் மணவாலாவில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் ஒட்டிப்பிறந்த இரட்டையார்களான சோஹ்னா மற்றும் மோஹ்னா வாக்களித்தனர். இவர்களின் வாக்கு மிகவும் தனித்துவமானது. மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் பட்டியலின் கீழ் வாக்களித்த இவர்களது வாக்குப்பதிவை முறையாக வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இவர்கள் இணைந்திருந்தாலும் இரண்டு தனி வாக்காளர்கள். அவர்களின் வாக்குகள் இரகசியம் காக்கப்படும் வகையில் அவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன” எனத் தெரிவித்தார்.





இந்நிலையில் இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான்



## விபத்தில் மணமகன் உட்பட 9 பேர் உயிரிழப்பு

கார் ஒன்று ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானத்தில் 9 பேர் உயிரிழந்த சம்பவம் ராஜஸ்தானில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம், சௌத் கா பர்வாடாவிலிருந்து நேற்றைய தினம் (20) காரில் உஜ்ஜயினியில் நடைபெறும் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க மணமகன் உட்பட 9 பேர் சென்றுகொண்டிருந்த நிலையில், குறித்த காரானது வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்தில் மணமகன் உட்பட காரில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோவை

### தி.மு.கவுக்கு ஆதரவு கோரி

## ருமேனியா நபர் பிரசாரம்

தொழில் முறை விசாவில் வந்த வெளிநாட்டவர் ஒருவர், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு (தி.மு.க) ஆதரவாகப் பிரசாரம் மேற்கொண்டமை தமிழகத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ருமேனியாவைச் சேர்ந்த ஸ்டீபன் நெகொய்டா என்ற 60 வயதான நபரே அண்மையில் தொழில் விசாவில் கோவைக்கு வந்துள்ள நிலையில், இவ்வாறு பிரசாரத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துவரும் நிலையில், குறித்த நபர் கழுத்தில் தி.மு.கவின் துண்டை அணிந்து, சிங்காநல்லூர் பகுதியில் வீதி வீதியாகவும் பஸ்களில் ஏறியும் வாகனங்களில் சென்றும் தி.மு.கவுக்கு ஆதரவு திரட்டியதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், வெளிநாட்டவர் கோவையில் பிரசாரத்தில் ஈடுபட்டது பரபரப்பை ஏற்படுத்தியதோடு, சமூக வலைத்தளங்களிலும் இது குறித்த புகைப்படங்கள் வைரலாகின.



சென்னை

### 26 வாக்களிப்பு நிலையங்களில்

## மறுதேர்தல் அவசியம்

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் சென்னை மாநகராட்சியில் ஆளும் கட்சியினரான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் (தி.மு.க) வன்முறையில் ஈடுபட்டுள்ளதாகவும், இதனால் 26 வாக்களிப்பு நிலையங்களில் மறுதேர்தல் நடத்தப்படவேண்டுமெனவும் தெரிவித்து, மாநில தேர்தல் ஆணையரிடம் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க ) வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அ.தி.மு.க சட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆர்.எம். பாபு முருகவேல், மாநில தேர்தல் ஆணையரிடம் நேற்று முன்தினம் (19) மனுவொன்றைக் கையளித்துள்ளார்.

குறித்த மனுவில், ‘நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலில் வழக்கம்போல தி.மு.க வன்முறையைக் கையில் எடுத்துள்ளது. அத்துடன் தனது தோல்வியை மறைப்பதற்காக, பெரும்பாலான இடங்களில் அராஜகத்தை கட்டவிழ்த்து விட்டு, வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

வாக்குப்பதிவு தினத்தன்று மாலை 5 மணி நிலைவரப்படி 41 சதவீத வாக்குகள் மட்டுமே பதிவாகி இருந்தன. தி.மு.கவின் வன்முறை வெறியாட்டத்தால்தான் குறைவான வாக்குகள் பதிவாகியுள்ளன.

தேர்தல் ஆணையமும் பொலிஸாரும் கையைக் கட்டி, வாயை மூடி தி.மு.கவுக்கு கைப்பாவையாக மாறிவிட்டன. எனவே இப்புகாரின் மீது உரிய நடவடிக்கை எடுத்து, குறித்த 26 வாக்களிப்பு நிலையங்களிலும் மறுதேர்தல் நடத்த வேண்டும். இல்லையென்றால், உயர் நீதிமன்றத்தின் கண்டனத்துக்கு தேர்தல்ஆணையம் உள்ளாக நேரிடும்’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.



ஜம்மு காஷ்மீர்

### மோதிரம் கழன்று வராததால்

## பெண்ணின் விரலை வெட்டிய நபர்

மோதிரம் கழன்று வராததால், திருடன் ஒருவன் பெண்ணின் விரலை வெட்டிய சம்பவம், ஜம்மு - காஷ்மீரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு - காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று, பெண் ஒருவர் அப்பகுதியில் உள்ள வயலுக்குத் தனியாகச் சென்றுள்ளதாகவும் அப்போது அங்கு மறைந்திருந்த திருடன் அப்பெண்ணைப் பின்னாலிருந்து பலமாகத் தாக்கியதாகவும், இதனால் அப் பெண் மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளதாகவும், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அப் பெண் அணிந்திருந்த மோதிரம், தோடு உள்ளிட்ட தங்க ஆபரணங்களை அத்திருடன் கழட்ட முயன்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதிரத்தைக் கழட்ட முடியாமல் போனதால், ஆத்திரமடைந்த திருடன் விரலை வெட்டி மோதிரத்தை எடுத்துள்ளதோடு, காதணியையும் காதில் இருந்து அறுத்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.









## உதவிய கரங்கள்

பசறை, கமேவல பகுதியில் பெற்றோரை இழந்து தமது பாட்டியின் அரவணைப்பிலிருக்கும் மூன்று பிள்ளைகளுக்கு இரத்தினபுரி ‘உதவும் கரங்கள்’ அமைப்பினர் தமது சொந்தநிதி மூலம் புதிய வீடொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். இவ்வீட்டின் புதுமனைபுகுவிழா நிகழ்வு நேற்று முன்தினம் (19) நடைபெற்றதுடன், இதில் உதவும் கரங்கள் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (எம். செல்வராஜா)







## நிதிசேகரிக்கும் பணி

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தையொட்டி, சைவ ஆகம விதிப்படி, ஏழு ஊர்களில் மக்களது நிதிப்பங்களிப்பை பெறவேண்டி, கோவில் நிர்வாக சபையினர் நிதி சேகரிப்புப் பணியை ஆரம்பித்துள்ளனர். காரைதீவு, ஆலையடிவேம்பு, கல்முனை, திருக்கோவில் போன்ற இடங்களில் கோவில் தலைவர் கி. ஜெயசிறில் தலைமையில் தற்சமயம் இப்பணி நடைபெற்றுவருகிறது. (படங்கள்: சகா)







## அடிக்கல் நாட்டினர்

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதியொதுக்கீட்டில், தலவாக்கலை லோகி தோட்டம், லிந்துலை, அக்கரகந்தை பெசிபன் ஆகிய தோட்டங்களில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற்று முன்தினம் (19) நடைபெற்றது. (பி. கேதீஸ்)













## 18 வருடங்களின் பின் தேர் பவனி

கண்டி, உடபேராதனை, மாவல்லை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் வருடாந்த தேர்த்திருவிழா, 19 வருடங்களுக்குப் பின்னர் பெப்ரவர் 18ஆம் திகதியன்று நடத்தப்பட்டது.

SLT–MOBITEL இனால்

# மர நடுகை திட்டம் ஆரம்பம்



நாடளாவிய ரீதியில் 'நாடு முழுவதிலும் சுவாசமும் உரமும் பயிரிடுவோம்' எனும் மர நடுகைத் திட்டத்தை SLT-MOBITEL ஆரம்பித்துள்ளது. காற்றின் தரத்தை மேம்படுத்தவும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதில் பங்களிப்பு வழங்கும் வகையிலும், நிலைபேறான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான உறுதியான அர்ப்பணிப்பாக இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. மொனராகலை, மீயாகல ஸ்ரீ மெத்தாராம விகாரையில் இந்தத் திட்டம் அண்மையில் SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ, SLT குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT-MOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள், பிராந்தியத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் பங்கேற்புடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் நாட்டிலுப்பை (Madhuca Longifolia) மரத்தை இந்தத் திட்டத்துக்காக SLT-MOBITEL தெரிவு செய்திருந்தது. இயற்கை பீடை கட்டுப்படுத்தியாக அமைந்திருப்பதுடன், சேதன உர தயாரிப்புக்கு பங்களிப்பு வழங்குவது, வளியை தூய்மையாக்குவது, மூலிகை மருந்து வகைகள் தயாரிப்பில் பங்களிப்பு வழங்குவது போன்ற அம்சங்கள் இம் மரத்தில் அடங்கியுள்ளன.

நிகழ்ச்சியின் முதல் அங்கமாக, மீயாகல ஆரம்ப பாடசாலையில் நாட்டிலுப்பை மரக் கன்றுகள் நடப்பட்டன. மீயாகல கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு 500 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தத் திட்டம் தொடர்பாக SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில், நாம் சுவாசிக்கும் காற்றின் தரத்தை மேம்படுத்துவது, காலநிலை மாற்றத்துக்கு எதிரான செயற்பாடுகள், எமது பொதுவான சுகாதாரம் மற்றும் நலனை மேம்படுத்துவது போன்றவற்றில் பங்களிப்பு வழங்குவதற்கு எம்மை உறுதியாக அர்ப்பணித்துள்ளோம். பசுமையான சூழலுக்காக எமது நாடளாவிய ரீதியிலான திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளதுடன், சூழலைப் பாதுகாப்பதற்கான எமது அர்ப்பணிப்பை உறுதி செய்துள்ளோம். எம் ஒவ்வொருவராலும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்றார்.

SLT-MOBITEL இன் சூழல், சமூக மற்றும் ஆளுகை நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாக அமைந்துள்ள மர நடுகைத் திட்டத்தினூடாக, வனாந்தரங்களை ஊக்குவித்தல், இயற்கை காபன் சமநிலையைப் பேணி, பச்சை இல்ல வாயுக்களை குறைத்தல், வளி சுத்திகரிப்புக்கு பங்களிப்பு வழங்கல், உயிரியல் பரம்பலை பாதுகாத்தல், சேதன உரத்தைத் தயாரித்தல், பொது மக்கள் மத்தியில் நாட்டிலுப்பை மரங்களை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துதல் போன்றவற்றை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், SLT-MOBITEL இனால் மர நடுகைத் திட்டங்களை 'Thuru' App ஊடாக கண்காணிப்பதுடன், ஒவ்வொரு மரத்தின் வளர்ச்சியையும் கண்காணிக்கக்கூடிய டிஜிட்டல் தீர்வாக அமைந்துள்ளது. அதனூடாக, மர நடுகைத் திட்டத்தின் வினைத்திறனை கண்காணித்துக் கொள்ள முடியும்.

சமூகத் தாக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் SLT-MOBITEL இனால் மீயாகல ஆரம்ப பாடசாலை நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. கிராமிய பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்த, 'மனமிருந்தால் புத்தகமொன்றை வழங்குங்கள்' எனும் நிகழ்ச்சியின் அங்கமாக இது அமைந்திருந்தது.



# Saegis கம்பஸ் பட்டமளிப்பு வைபவம்

Saegis கம்பஸ், தனது பட்டமளிப்பு வைபவத்தை அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) முன்னெடுத்திருந்தது. கம்பஸின் உபவேந்தர் பேராசிரியர் நாலக ஜயகொடியின் மேற்பார்வையின் கீழ், கடுமையான சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி இந்த வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தின் போது தமது பட்டப்படிப்புகள், டிப்ளோமா கற்கைகளைப் பூர்த்தி செய்த சுமார் 976 மாணவர்கள், தமது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த வைபவத்தின் பிரதம அதிதியாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு கல்வியகத்தின் முகாமைத்துவ பேராசிரியரான பேராசிரியர் அஜந்த எஸ். தர்மசிறி, துறையின் அனுபவசாலியும் டயலொக் அக்சியாடா பிஎல்சியின் பணிப்பாளரும் குழும பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சுபுன் வீரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வைபவத்தில் Saegis கம்பஸ் தவிசாளர் பண்டார திஸாநாயக்க, கல்வி விவகாரங்களுக்கான பணிப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் டபிள்யூ ஜி. டி தர்மரட்ன, ஆளுகை சம்மேளனத்தின் அங்கத்தவர்கள், கல்வி அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரித்தானியாவின் Canterbury Christ Church University இலிருந்து Master of Business Administration (MBA) பட்டத்தை மொத்தமாக 125 பட்டதாரிகள் பெற்றுக் கொண்டதுடன், MSc International Business programme கற்கையை பூர்த்தி செய்த 21 பட்டதாரிகளும் தமக்கான பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். Saegis கம்பஸ் மற்றும் பல்கலைக்கழகத்துக்கிடையிலான நீண்ட கால பங்காண்மை என்பது உறுதியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன், உலகத் தரம் வாய்ந்த பட்டப்பின்படிப்பு கற்கைகளை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளது. இதனூடாக புத்தாக்கமான சிந்தனை மற்றும் அறிவுப் பகிர்வுக்கு வழிகோலப்பட்டுள்ளது.

இலங்கையின் புகழ்பெற்ற கல்விமான்கள், நிபுணர்களால் இந்தக் கற்கைகள் கற்பிக்கப்படுவதுடன், அதனூடாக இன்றைய தலைவர்கள் கொண்டுள்ள அறிவு, திறன்களின் பிந்திய விடயங்களை மாணவர்களுக்கு வழங்கி, அவர்களை கூட்டாண்மைத் துறையில் பிரவேசிக்க அல்லது தமது நிலைகளில் முன்னேறுவதற்கு அல்லது தொழில் முயற்சியாளர்களுக்கு சிறப்பாக செயலாற்றுவதற்கு உதவியாக அமைந்துள்ளது.

மேலும், 201 பட்டதாரிகள் பிரித்தானியாவின் Canterbury Christ Church University இலிருந்து BSc (Hons) in Business Management programme பட்டத்தைப் பெற்றுக் கொண்டனர். மேலும் சிலர் BSc (Hons) in Computing பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன், இதில் பிரித்தானியாவின் Heriot Watt University இன் Business Management உச்ச பட்டமும் அடங்கியிருந்தது.

இந்த வைபவத்தின் போது ஐக்கிய இராஜ்ஜியத்தின் பெருமைக்குரிய Scottish Qualification Authority இடமிருந்து சுமார் 560 மாணவர்களுக்கு Higher National Diploma (HND) in Business Management பட்டமளிக்கப்பட்டிருந்ததுடன், 64 மாணவர்களுக்கு Higher National Diploma (HND) in Computer Science பட்டமும் வழங்கப்பட்டிருந்தது.

பணியாற்றுவதற்கு சிறந்த பணியிடமாக

# ஸ்டார் காமன்ட்ஸ் தெரிவு

சுகாதாரமாகத் திகழ்வது மற்றும் பங்கேற்கும் வழிமுறைகள் தொடர்பில் ஊழியர்களுக்கு முக்கியத்துமளிப்பது தொடர்பில் சர்வதேச ஆடை உற்பத்தியாளரான ஸ்டார் காமன்ட்ஸ் குழுமம் காண்பிக்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளினூடாக, பணியாற்றுவதற்கு சிறந்த பணியிடங்களில் ஒன்றாக Great Place to Work நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

நம்பகத்தன்மை, நேர்மைக்கு மதிப்பளிப்பது, பெருமை போன்றவற்றுக்காக புகழ்பெற்ற Trust Index Survey and Culture Audit Management கருத்தாய்வின் போது, ஊழியர்களின் அனுபவங்கள் பகிரப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு, இந்தச் சான்றளிப்பு ஸ்டார் காமன்ட்ஸ் குழுமத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பெறுமதிகள் நேர்த்தியானவையாகவும் உண்மையானவையாகவும் அமைந்திருப்பதாக சுமார் 90 சதவீதமான ஆய்வுப் பெறுபேறுகள் வெளிப்படுத்தியிருந்தன.

ஒவ்வொரு நபர் மத்தியிலும் பயிலல் மற்றும் வளர்ச்சியைத் தூண்டும் பணிச் சூழலை ஏற்படுத்தி பேணுவது என்பதில் நிறுவனம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அறிவுப் பகிர்வு என்பதில் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளது. கடந்த இரு தசாப்த காலப்பகுதியில், குழுமத்தால் நாட்டிலுள்ள சகல தொழிற்சாலைகளிலும் 1,784 பயிற்சிப் பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இதில் 41,398 சிரேஷ்ட ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர்.

நபர் ஒருவருக்கு வளர்ச்சியை எய்துவதற்கும் பயில்வதற்கும், பல வாய்ப்புகளை வழங்க வேண்டும் என ஸ்டார் காமன்ட்ஸ் குழுமம் கருதுவதுடன், ஊழியர்களின் மகிழ்ச்சி சுட்டெண்ணில் அதிகளவு பங்களிப்புச் செலுத்தும் காரணியாக அமைந்திருப்பதாகவும் நம்புகின்றது. ஒவ்வோர் ஊழியரிலும் இந்த விடயங்களுக்காக தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொள்வதற்கு முயற்சிப்பதுடன், ஸ்டார் காமன்ட்ஸ் குழுமத்தில் ஊழியர் விருத்தி என்பது பங்காண்மையாகக் கருதப்பட்டு, குழு அங்கத்தவர்களிடையே வளர்ச்சி தொடர்பான மனநிலையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

குழுமத்தின் வருடாந்த பயிற்சி அமர்வுகளின் போது, இது மிகவும் பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், சராசரியாக 150 - 200 பயிற்சிகளில் சுமார் 2,000 - 3,000 ஊழியர்கள் அவற்றில் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். இதற்கு மேலதிகமாக, மேற்பார்வையாளர்களுக்காக 20 விருத்தி அமர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தப் பயிற்சிகளின் பெறுமதியை முகாமையாளர் திறன் மேம்படுத்தல் (40 சதவீதம்), தொழில்நுட்பத் திறன் மேம்படுத்தல் (25 சதவீதம்), ஊக்கமளிப்பு மற்றும் பிரத்தியேக விருத்தி (35 சதவீதம்) என வகைப்படுத்த முடியும்.

ஸ்டார் காமன்ட்ஸ் குழுமத்தைப் பொறுத்தமட்டில், தொடர்ச்சியான நிபுணத்துவ விருத்தி என்பது சொற்பதமாக மாத்திரம் அமைந்திராமல், ஊழியர்களுக்கு அடிப்படையான மற்றும் சிக்கல்கள் நிறைந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில், வளர்ந்து வரும் மற்றும் சிறந்த திறன்களையும் ஆற்றல்களையும் பெற்று, அவற்றில் தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கான கொள்கையாகவும் தந்திரோபாயமாகவும் அமைந்துள்ளது. ஊழியர்களுக்கு வெறுமனே தம்மை வளர்த்துக் கொள்வது மாத்திரமன்றி, தம்மின் சிறந்த பெறுமதிகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் தூண்டுவதாகவும் அமைந்துள்ளது.

நாட்டிலுள்ள அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த புகழ்பெற்ற பயிற்றுவிப்பாளர்கள், கல்வி நிலையங்களினூடாக இந்தப் பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் பல்வேறு சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டங்களில் ஊழியர்கள் பங்கேற்கின்றனர்.



பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சியின்

# புதிய இணையத்தளம் அறிமுகம்

பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி, தனது பங்குதாரர்களுடனான ஈடுபாட்டை மென்மேலும் அதிகரிக்கவும், வளர்ச்சி கண்டு வருகின்ற நிறுவனத்தின் செயற்றிறனை மேம்படுத்தவும் மற்றும் அதன் டிஜிட்டல் பயணத்தில் ஒரு திருப்புமுனையாகவும் www.peoplesmerchant.lk என்ற தனது புதிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

'எப்போதும் எங்கேயும் நிதிச் சேவைகளில் சிறந்து விளங்குதல்' என்ற அதன் இலட்சியத்தின் உந்துசக்தியுடனும், அதன் மாற்றத்துக்கான மூலோபாயத் திட்டமாகவும், பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி தனது இணையத்தளம் பாவனையாளர்களுக்கு மிகவும் இலகுவாக இருப்பதை உறுதி செய்தது. இந்த இணையத்தளம் கவர்ச்சிகரமான ஈடுபாட்டு வடிவமைப்பைக் காண்பிப்பதுடன், இங்கு பாவனையாளர்கள் பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி வழங்கும் பல்வேறு நிதிச் சேவைகளை எளிதாக பெற்றுக்கொள்ள முடியும்.

பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபைத் தலைவரான சந்துல அபேவிக்ரம தெரிவிக்கையில், "இரண்டு வருடங்களாக நிலவும் தொற்றுநோயால் எழுந்துள்ள பாரிய சவால்களுக்கு நாம் இப்போது முகங்கொடுக்கின்றோம். குறிப்பிடத்தக்க வகையில், வாடிக்கையாளர் சேவையில் நாங்கள் எவ்விதமான குறைகளுக்கும் இடமளிக்கவில்லை. நாங்கள் வாடிக்கையாளர்களுக்கு தலைசிறந்த அனுபவத்தைத் தொடர்ந்து வழங்குவது மட்டுமல்லாமல், உண்மையில் நிறுவனத்தின் செயற்றிறனையும் மேம்படுத்தியுள்ளோம். 'எப்போதும் எங்கேயும் நிதிச் சேவைகளில் சிறந்து விளங்குதல்' என்ற எங்கள் நிறுவன இலட்சியத்துக்கு உண்மையான அர்த்தம் கற்பிக்கும் வகையில் செயற்பட்டுள்ளமையையிட்டு நாங்கள் பெருமை கொள்கிறோம்.

பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி வணிகத்தில் 39 வருடங்களைக் கொண்டாடுவதுடன் புதிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்துவது எமது டிஜிட்டல் பயணத்தில் ஒரு முக்கியமான முதல் படியாகும்.

மிகவும் ஆற்றல்மிக்க, ஈடுபாட்டுடனான மற்றும் பாவனையாளர்களுக்கு இலகுவான இணையத்தளத்தை அமைப்பதில் அணி மிகுந்த அக்கறை எடுத்துள்ளது. இணையத்தளம் மூலம் நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள வாடிக்கையாளர்களை நாங்கள் எட்ட முடியும். இணை- வங்கிச்சேவை தீர்வுகளை மறுசீரமைக்கவும், வழங்கவும் பல கூட்டாளர்களுடன் நாங்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளோம். எங்களின் சமீபத்திய வெற்றிகரமான மேலதிக பங்கு வழங்கல் நடவடிக்கை மற்றும் டிஜிட்டல் புத்தாக்கங்களின் பலனாக, பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி நிதித் துறையில் இனங்காணப்படுவதற்கான ஒரு சக்தியாக வெளிப்படும் ஒரு முக்கிய ஸ்தானத்தில் உள்ளது" என்று தெரிவித்தார்.

பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி இன் தலைமை நிர்வாக அதிகாரியான நளின் விஜேகோன் தெரிவிக்கையில், "உத்வேகம் பெற்றவர்கள் மூலம், அதிகமான மக்களின் வாழ்வை மேலும் பல இடங்களில் வளப்படுத்துவதே எங்கள் நோக்கம். அந்த இலக்கில், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கிளை விரிவாக்கம் ஆகிய இரட்டை மூலோபாயங்களை நாங்கள் பின்பற்றி வருகிறோம். தற்போது, பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி 12 கிளைகளைக் கொண்டு இயக்கி வருகிறது. அத்துடன், இந்த ஆண்டு மேலும் ஆறு கிளைகளைத் திறப்பதற்கு, இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அனுமதியையும் பெற்றுள்ளோம்" என்று பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி இன் தலைமை நிர்வாக அதிகாரியான நளின் விஜேகோன் தெரிவித்தார்.



# 'லங்கா ரெமிட்' உடன் கொமர்ஷல் வங்கி இணைவு

நாட்டுக்குப் பணம் அனுப்புவதற்க்கு வசதியாக இலங்கை மத்திய வங்கியின் முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், 'லங்கா ரெமிட்' எனும் தேசிய பணம் அனுப்பும் மொபைல் செயலியுடன் இணைந்துள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

பங்காளி வங்கிகளின் ஆதரவுடன் LankaClear (Pvt) Ltd. ஆல் உருவாக்கப்பட்ட, இந்த மொபைல் அப்ளிகேஷன், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு தற்போதுள்ள பணம் அனுப்பும் முறைகளுக்கு நேரடி அணுகலை வழங்குகிறது.




மேலும், இலங்கைக்கு பணம் அனுப்புவதற்கு மிகவும் வசதியானதும் செலவு குறைந்த முறைகளைத் தெரிவுசெய்ய அவர்களுக்கு உதவுகிறது.

கொமர்ஷல் வங்கியானது 2003ஆம் ஆண்டில் eRemittance சேவையில் முன்னோடியாக இருந்ததுடன் 2016 இல் இலங்கையின் முதல் பணம் அனுப்பும் அட்டையை அறிமுகப்படுத்தியது. அத்துடன், அவசரநிலைகளின்போது முழுமையான ரொக்க முற்பணக் கடன் வசதியையும் அறிமுகப்படுத்தியது.

**இந்த மொபைல் அப்ளிகேஷன், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு தற்போதுள்ள பணம் அனுப்பும் முறைகளுக்கு நேரடி அணுகலை வழங்குகிறது. மேலும், மிகவும் வசதியானதும் செலவு குறைந்த முறைகளைத் தெரிவுசெய்ய அவர்களுக்கு உதவுகிறது**

# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், மெல்பேணில் நேற்று (20) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இலங்கையணி சார்பாக துடுப்பாட்டவீரர்கள் கமில் மிஷாரவும், ஜனித் லியனகேயும் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தனர்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, மத்தியூ வேட்டின் ஆட்டமிழக்காத 43 (27), கிளென் மக்ஸ்வெல்லின் 29 (21), ஜொஷ் இங்லிஷின் 23 (20), டேனியல் சாம்ஸின் 18 (15), மார்க்கஸ் ஸ்டொய்னிஸின் 17 (10) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், துஷ்மந்த சமீர 4-0-30-2, லஹிரு குமார 4-0-34-2, பிரவீன் ஜெயவிக்கிரம 4-0-29-1, சாமிக கருணாரத்ன 4-0-32-1, மஹேஷ் தீக்ஷன 4-0-27-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.



பதிலுக்கு, 155 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, குசல் மெண்டிஸின் ஆட்டமிழக்காத 69 (58), அணித்தலைவர் தசுன் ஷானகவின் 35 (31), சரித் அஸலங்கவின் 20 (09), பதும் நிஸங்கவின் 13 (08) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், கேன் றிச்சர்ட்ஸன் 3.4-0-28-2, அஸ்தன் அகர் 4-0-19-1, மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 2-0-13-0, அடம் ஸாம்பா 4-0-33-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மெண்டிஸும், தொடரின் நாயகனாக மக்ஸ்வெல்லும் தெரிவாகினர்.

சிநேகபூர்வப் போட்டியில்

# ஓட்டமாவடி வளர்பிறை வென்றது

■ அப்துல் பாஸித்



ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக் கழகத்துக்கும், நியூ ஸ்டார் விளையாட்டு கழகத்துக்குமிடையிலான 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட சிநேகபூர்வ கடினபந்து போட்டியில் ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக் கழகம் 7 விக்கெட்டுகளால் வென்றது.

ஓட்டமாவடி அமிர் அலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம், 17.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 92 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வளர்பிறை விளையாட்டுக் கழகத்தினர், 11 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# நடப்புச் சம்பியன்களை வீழ்த்திய டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றது.

டொட்டென்ஹாம் சார்பாக, ஹரி கேன் இரண்டு கோல்களையும், டெஜான் குலுவென்ஸ்கி ஒரு கோலையும் பெற்றனர். சிற்றி சார்பாக, இல்கி குன்டோகன், றியாட் மஹ்ரேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, செளதாம்டனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது. செளதாம்டன் சார்பாக, ஸ்டூவர்ட் ஆர்ம்ஸ்ேராங்க், ஷேன் லொங் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இப்போட்டிகளின் முடிவில் பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் சிற்றி உள்ளது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள லிவர்பூல், செல்சி, மன்செஸ்டர் யுனைட்டெட் என்பன 57, 50, 43 புள்ளிகளுடன் இரண்டாம், மூன்றாம், நான்காமிடங்களிலுள்ளன.

டயலொக் தேசிய சுப்பர் லீக் தொடர்:

# கண்டியை வென்று சம்பியனான ஜஃப்னா

நடைபெற்று வந்த டயலொக் தேசிய சுப்பர் லீக் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரில் ஜஃப்னா சம்பியனானது.

பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்டியுடனான இறுதிப் போட்டியில் வென்றே ஜஃப்னா சம்பியனாகியது.

**ஸ்கோர் விவரம்:**

நாணயச் சுழற்சி: கண்டி

ஜஃப்னா: 258/10 (48.3/49 ஓவ. )

(துடுப்பாட்டம்: டுனித் வெல்லலாகே 74 (87), ரவிந்து பெர்ணான்டோ 41 (42), நிஷான் மதுஷங்க 36 (45), நிமந்த மதுஷங்க 35 (50) ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணான்டோ 5/44 [9.3], சஹான் ஆராச்சிகே 1/21 [7], சஷிந்து கொலம்பகே 2/53 [10], நிபுன் ரன்சிக 1/23 [5])

கண்டி: 221/10 (45.5/49 ஓவ. )

(துடுப்பாட்டம்: கமிந்து மெண்டிஸ் 46 (73), டி சில்வா 37 (19), ஆராச்சிகே 33 (57), பண்டார 24 (28), ஒஷாத பெர்ணான்டோ 22 (18), சஷிந்து கொலம்பகே 20 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரமோத் மதுஷன் 4/59 [10], நிமந்த மதுஷங்க 3/17 [4.5], சமிந்த பெர்ணான்டோ 1/15 [4], சந்துஷ் குணதிலகே 1/33 [7], வெல்லலாகே 1/34.






பாராளுமன்றத்தை முற்றுகையிட்டோரில்

கனடா

# 70 பேர் கைது

கனடாவில் பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட 70 பேர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்கும் விதமாக அந்நாட்டு அரசு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது.

குறிப்பாக பொது இடங்களில் நடமாடுவோர், பொது போக்குவரத்தில் பயணிப்போருக்கு தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு, கனரக வாகன சாரதிகள் கட்டாயம் தடுப்பூசி செலுத்தப்படவேண்டுமெனவும் அவ்வாறு தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் ஒரு வாரம் தனிமைப்படுத்தப்படுவார்கள் என அரசு உத்தரவிட்டுள்ளது.



இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கனரக வாகன சாரதிகள், தலைநகர் ஒட்டாவாவில் உள்ள முக்கிய வீதிகளில் அண்மைகாலமாக கனரக வாகனங்களை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கனடாவின் பாராளுமன்றம் அருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டிருந்த நிலையில் 70 க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடமிருந்து 24 க்கும் மேற்பட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



துருக்கி

# 1000 காதலிகள்; 69,000 கருத்தடை மாத்திரைகள்

நீதிமன்றமொன்று மதபோதகர் ஒருவருக்கு 1075 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துத் தீர்பளித்துள்ள சம்பவம் துருக்கியில் இடம்பெற்றுள்ளது.

'அட்னான் ஒக்டர்('Adnan-oktar) என்ற நபருக்கே கடந்த ஜனவரி மாதம் இஸ்தான்புல் நீதிமன்றத்தினால் இத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மீது "தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்பியமை, சிறுவர் மற்றும் பெண்கள் மீது பாலியல் வன்கொடுமை புரிந்தமை, மோசடி உள்ளிட்ட 10 வெவ்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் 1075 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

64 வயதான குறித்த நபர் நீதிமன்ற விசாரணையின் போது தனக்கு 1,000 காதலிகள் இருப்பதாகத் தெரிவித்ததாகவும் இதனையடுத்து அவரது வீட்டை பொலிஸார் சோதனை செய்த போது 69,000 கருத்தடை மாத்திரைகள் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்து வருவதாகவும், இதனால் குறித்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்யவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. மேலும் குறித்த நபர் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டை நிராகரித்து, ஹாருன் யாஹ்யா என்ற புனைப்பெயரில் 'The Atlas of Creation' என்ற தலைப்பில் 770 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அபுதாபி

# ஆளில்லா விமானக் கண்காட்சி

## 26 நாடுகள் பங்கேற்பு

அபுதாபியில் 26 நாடுகள் கலந்துகொள்ளும் ஆளில்லா விமான கண்காட்சி இன்றைய தினம்(21) நடைபெறவுள்ளது.

அபுதாபியில் இருக்கும் தேசிய கண்காட்சி மையத்தில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் ஆளில்லாத விமானத்தை இயக்குவது குறித்த பயிற்சி, மற்றும் அதன் தொழில்நுட்பங்கள், பாதுகாப்பு சவால்கள், நவீனமயமான திட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தொடர்ந்து ஐந்தாவது வருடமாக நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் 26 நாடுகளிலிருந்து சுமார் 134க்கும் அதிகமான வர்த்தக நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கண்காட்சியில், ஒஸ்திரியா, துருக்கி, பக்ரைன், இஸேரல், பல்கேரியா, மால்டா மற்றும் செர்பியா ஆகிய நாடுகள் முதல் தடவையாக கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பூமியிலிருந்து செவ்வாய்க்கு

# 45 நாட்களில் பயணம்

பூமியிலிருந்து செவ்வாய்க்கு 45 நாட்களில் செல்லக்கூடிய வகையில் புதிய தொழில்நுட்பமொன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



ஆச்சரியமாக இருந்தாலும் இது சாத்தியமாகும் உண்மை, என்றும் அவர்கள் உறுதியளிக்கின்றனர் .

லேசர்-வெப்ப உந்துவிசை" தொழில்நுட்பத்தின் மூலம் இதனை சாத்தியமாக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நிலவரப்படி ஒருவர் செவ்வாய் கிரகத்தை அடைய சுமார் 500 நாட்கள் ஆகும் என்று நாசா கணித்துள்ள நிலையில் ஆறு வாரங்களில் செவ்வாய் கிரகத்தை அடைவது என்பது, அணுசக்தியால் இயங்கும் ரொக்கெட்டுகளால் மட்டுமே முடியும் என்று முன்பு கருதப்பட்டது.

எனினும் தற்போதைய தொழில்நுட்பம் செவ்வாய்க்கான பயண நேரத்தை குறைப்பதில் வெற்றி பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கை கைவிட வேண்டாம்

## உலக சுகாதார ஸ்தாபனம் வேண்டுகோள்



"ஊரடங்கை கைவிட வேண்டாம் " என உலக சுகாதார ஸ்தாபனம் உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் "கொரோனாத் தொற்றுப் பரவலின் தாக்கமானது இன்னும் முழுமையாக உலகை விட்டு நீங்கவில்லை. எனவே உலக நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளது. அத்துடன் உலகிலுள்ள 193 நாடுகளில் சில நாடுகள் வைரஸ் தாக்கம் முழுமையாக நீங்கி விட்டதாக நினைத்து ஊரடங்கு கட்டுப்பாடுகளை முழுமையாக நீக்கி விடுகின்றன. அதன்பின் திடீரென வைரஸ் தாக்கம் அதிகரித்ததை அடுத்து மீண்டும் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துகின்றன.

இதற்கு நேர் மாறாக சில நாடுகள் வைரஸ் தாக்கத்தின் அளவை ப் பொறுத்து படிப்படியாகவே ஊரடங்கு கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வருகின்றன. இம் முறையே சரியானது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன்

ரஷ்யா–உக்ரைனுக்கு இடையில்

# பதற்றம் அதிகரிப்பு

**போர் நிறுத்த மீறல்கள் 1,500 ஆக அதிகரிப்பு**

ரஷ்யா-உக்ரைன் நாடுகள் இடையிலான போர் பதற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக இரு நாட்டு எல்லையிலும் இலட்சக்கணக்கான போர் வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் போர் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் அபாயம் காணப்படுகின்றது.



இந்நிலையில் கிழக்கு உக்ரைன் பகுதியில் நேற்று முன்தினம்(19) ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி வெடிகுண்டு தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும் இதுவரை 1,500 போர் நிறுத்த ஒப்பந்த மீறல்கள் நடந்துள்ளதாகவும் இதில் டொனெட்ஸ்கில் பகுதியில் 591 மீறல்களும், லுகான்ஸ்கில் 975 மீறல்களும் பதிவாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த எட்டு ஆண்டுகாலமாக தொடரும் இரு நாடுகளுக்கு இடையேயான மோதலில் உயர்ந்த பட்சமாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்யா தனது அணு ஆயுத பலத்தை காட்டும் வகையில் பிரமாண்ட போர் பயிற்சியில் ஈடுபட இருப்பதாக தெரிவித்துள்ளமை உலக நாடுகள் மத்தியில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 21 பெப்ரவரி 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.